

# கொழும்பில் மக்கள் பலவந்தமாக வீடுகளிலிருந்து வெளியேற்றப்படுதல்

## அழகுபடுத்தலின் அவலட்சண விலை

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் | ஏப்ரல் 2014

# கொழும்பில் மக்கள் பலவந்தமாக வீடுகளிலிருந்து வெளியேற்றப்படுதல்: அழகுபடுத்தலின் அவலட்சண விலை

*மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்*

ஏப்ரல் ௨௦௧௪

# ஏற்புரைகள்

இந்த அறிக்கை இரோமி பெரேரா, லுவி கணேசதாசன், சுபாஷினி சமராரச்சி மற்றும் தியாகி ருவன் பத்திரண என்போரால் தொகுக்கப்பட்டதாகும். ஆய்வு மற்றும் அறிக்கை வரைபு சம்பந்தமாகக் கருத்துரை வழங்கியமைக்காக ஆசிரியர்கள் கலாநிதி பீ. சரவணமுத்து அவர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றனர்.

கொழும்பில் எண்ணிறந்த தனிநபர்களின் உதவியும், ஆதரவும் இல்லையெனில் இந்த ஆய்வும், அறிக்கையும் சாத்தியப்பட்டிருக்கமாட்டா. தகவல் மற்றும் ஆவணங்களை வழங்கிய தனிநபர்களுக்கு CPA அமைப்பு ஆழமான நன்றிக்கடன்பட்டுள்ளது. அவர்களின் வேண்டுகோளின் பிரகாரம் இத்தனிநபர்களின் பெயர்கள் வெளியிடப்படவில்லை.

அட்டைப் புகைப்படம்: மெகாரா தெகால் - கொம்பனித் தெருவில் அவர்களின் வீடுகள் இடித்தழிக்கப்பட்ட பின்னர் வதிவாளர்கள், பெப்ருவரி 2014

**மாற்று கொள்கைகளுக்கான நிலையம்**

மாற்று கொள்கைகளுக்கான நிலையமானது ஆளுகை மற்றும் முரண்பாட்டு தீர்வுகள் தொடர்பில் முக்கிய அவதானத்தை செலுத்தும் சுதந்திர மற்றும் பக்கசார்ப்பற்ற ஓர் அமைப்பாகும். பொது கொள்கைகள் தொடர்பிலான வாதம் முக்கியமாக சிவில் சமூகத்தில் வலுப்பெற வேண்டுமென்பதை உறுதியாக அறிந்து 1996ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இம்மாற்று கொள்கைகளுக்கான நிலையம், பொது கொள்கைகளை விமர்சித்தல், அவற்றுக்கு மாற்று வழிகளை அறிதல் மற்றும் அவற்றை பகிர்ந்து கொள்ளல் ஆகிய நடவடிக்கைகளை ஆராய்ச்சி மற்றும் காத்துக்கோடல் வழிமுறைகளினூடாக மேற்கொண்டு வருகிறது.


முகவரி: 24/2, 28வது ஒழுங்கை, பிளவர் வீதி
கொழும்பு 7, இலங்கை

தொலைபேசி: +94(11) 2565304/5/6

∴பக்ஸ்: +94(11) 4714460

வெப்தளம்: www.cpalanka.org

ஈ-மெயில்: info@cpalanka.org

## உள்ளடக்க அட்டவணை


| | |
|---|---|
| **சுருக்கப் பெயர்கள்** | 5 |
| முன்னுரை | 6 |
| **பகுதி I: கொழும்பில் நகர்ப்புற புத்தாக்கமும், மக்கள் வீடுகளிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்படுதலும்: அரசியல் மற்றும் கொள்கைச் சூழமைவு** | 8 |
| அறிமுகம் | 8 |
| **தேசிய வீடமைப்புக் கொள்கையும், கொழும்பின் நகர்ப்புறப் புத்தாக்கக் கருத்திட்டமும்** | 9 |
| இராணுவமயமாக்கலும், ஜனநாயகம் படிப்படியாகச் சிதைவடைதலும் | 12 |
| **கொழும்பில் மக்கள் வீடுகளிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்படுதலும், காணியின் அரசியல் பொருளாதாரமும்** | 13 |
| உலக வங்கியின் பாத்திரம் | 18 |
| **முடிவுரை** | 20 |
| பகுதி II: கொழும்பில் பலவந்த வெளியேற்றங்களின் அனுபவம் - பாதுகாப்புகள் குடைசாய்க்கப்படுவதும், உரிமைகள் சீரழிப்பும் | 22 |
| **உள்ளூர் மற்றும் சர்வதேசத் தரநியமங்கள்: ஒரு சுருக்கமான பொதுப்பார்வை** | 23 |
| நிகழ்வு ஆய்வுகளும், குறிப்பான கரிசனை விடயங்களும் | 27 |
| **இராணுவமயமாக்கல்** | 31 |
| சட்டத்தின் தெரிவுசெய்யப்பட்ட, நிலைமாற்றத்துடன்கூடிய பயன்பாடு | 32 |
| **தகவலின்மையும், பங்கேற்பின்மையும்** | 35 |
| நஷ்டஈடு வழங்க மறுத்தலும், பாதிப்புற்ற மக்களைச் செலவிட வைத்தலும் | 37 |
| **நஷ்டஈடு வழங்குவதில் தாமதங்கள்** | 39 |
| வாழ்வாதாரங்கள் மற்றும் கல்விக்கான அணுகுவழிகளைக் குடைசாய்த்தல் | 39 |
| **விதப்புரைகள்** | 40 |
| பின்னிணைப்பு 1 | 47 |
| **பின்னிணைப்பு 2** | 49 |
| பின்னிணைப்பு 3 | 50 |

## சுருக்கப் பெயர்கள்

| | |
|---|---|
| ADB | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| CMC | கொழும்பு மாநகர சபை |
| CPA | மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் |
| DS | பிரதேச செயலகம் |
| FKM | கொம்பனி வீதி மஸ்ஜித்துகள் சம்மேளனம் |
| LAA | காணிச் சுவீகரிப்புச் சட்டம் |
| MCUDP | மெட்ரோ கொழும்பு நகர்ப்புற அபிவிருத்திக் கருத்திட்டம் |
| NHP | தேசிய வீடமைப்புக் கொள்கை |
| NIRP | தேசிய பலவந்த மீள்குடியேற்றக் கொள்கை |
| RAP | மீள்குடியேற்றச் செயல்திட்டம் |
| SCDP | உத்தி மாநகரங்கள் அபிவிருத்திக் கருத்திட்டம் |
| UDA | நகர அபிவிருத்தி அதிகாரசபை |
| UNP | ஐக்கிய தேசியக் கட்சி |
| UPFA | ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு |
| URP | நகர்ப்புற புத்தாக்கக் கருத்திட்டம் |
| WB | உலக வங்கி |

## முன்னுரை

கொழும்பு மாநகரத்தில் மக்கள் பலவந்தமாக வீடுகளிலிருந்து வெளியேற்றப்படுவது குறித்த பாரதூரமான விசனங்கள் காரணமாக இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது. குறிப்பாக, பலவந்த வெளியேற்றங்களில் இராணுவத்தால் கட்டுப்படுத்தப்படும் நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA) செயற்படுவதும், வடக்கு, கிழக்கில் கையாளப்படும் ஒத்த நெறிமுறைகள் இங்கும் கையாளப்படுவதும், சில முன்மதிப்பீடுகளின் பிரகாரம் யுத்தத்தின் இறுதி இரண்டு வருடங்களின்போது இலங்கையின் வட பகுதியில் இடம்பெற்ற இடம்பெயர்வுகளைவிட மிகப்பாரிய அளவில் இது இடம்பெறவிருப்பதும் விசனமளிப்பதாகவுள்ளது.

கொழும்பில் இடம்பெறும் பலவந்த வெளியேற்றங்களை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் ஒரு பகுதியாக நோக்குவது, மிகப் பிரமாண்டமான சமூக, பொதுமக்கள் மற்றும் மனித ஆகுசெலவுகளை மூடிமறைப்பதற்கே பயன்படுமென்பது இந்த அறிக்கையில் காணப்படும் உள்மைய வாதமாகும். ஆகவே, இந்த அறிக்கை (பகுதி Iஇல்) கொழும்பு நகர்ப்புறப் புத்தாக்கக் கருத்திட்டத்தின் வெளிப்படையாகத் தோன்றும் குறியிலக்குகளையும், நோக்கங்களையும் கேள்விக்குட்படுத்துவதோடு, (பகுதி IIஇல்) அவற்றை ஈட்டிக்கொள்வதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையும், இலங்கை அரசாங்கமும் கையாளும் வழிமுறைகள் மற்றும் செயல்முறைகள் குறித்தும் வினாவெழுப்புகின்றது.

இச்செயல்முறையில் தற்போது நிலவும் ஒருவீச்சான உள்ளூர் சட்ட மற்றும் கொள்கைக் காப்பேற்பாடுகளும், தரநியமங்களும் எதுவிதத் தண்டனைப் பயமுமின்றி, காற்றில் பறக்கவிடப்படுகின்றனவென்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) நம்புகின்றது. பலவந்த வெளியேற்றங்களைத் தடுக்கவும், அதிகுறைவாக்குவதற்கும், ஏதாவது மீள்குடியேற்றம் சிவில், பொருளாதார, அரசியல் மற்றும் சமூக உரிமைகள் சீரழியாமல் கணிசமான அளவு பெருக்கமடைவதை உறுதிசெய்வதற்கும் உள்நாட்டிலும், சர்வதேசரீதியிலும் அங்கீகரிக்கப்பட்ட தரநியமங்களுக்கு மதிப்பளிப்பது தீர்மானகரமானது என்பதை அறிக்கை சுட்டிக்காண்பிக்கின்றது.

அறிக்கை தனது பகுப்பாய்வுக்கு கொழும்பில் தொடரும் மற்றும் தொடரவிருக்கும் பலவந்த வெளியேற்றங்களுக்கு இராணுவமயப்படுத்தலை மாத்திரமன்றி, ராஜபக்ஷ நிர்வாகத்தின் சுதந்திர சந்தைத் திசைமார்க்கப்படுத்தலையும் அடிப்படையாக வைத்துள்ளது. கொழும்பின் நகர்ப்புற நிலைமாற்றத்துக்கு அடிப்படையாக விளங்குபவை நகர்ப்புறக் காணிச் சந்தைகளின் அரசியலும், மற்றும் உள்ளூர் பிராந்திய மற்றும் சர்வதேச காணி, கட்டிட நிதியளிப்பும், மூலதனமும், இருதரப்பு மற்றும் பல்தரப்பு அபிவிருத்திக் கடன் வழங்கல் பொறிமுறையமைப்புகளுமாகும். நகர்ப்புற புத்தாக்க முயற்சி ''சேரிகளற்ற'' (வறுமையற்ற நிலை உள்ளடக்கப்படாத) மற்றும் ''அழகான'' (அனைவரையும் உள்ளடக்காத) கொழும்பு என்னும் சுலோகங்களும் மற்றும் பலவந்த வெளியேற்றங்களும் கொழும்பில் காணியின் அரசியல் பொருளாதாரத்தோடு சிக்கவிழ்க்கமுடியாத அளவுக்குப் பின்னிப் பிணைந்துள்ளன.

இந்த ஆவணம் அனைத்துமடங்கும், 'பூரணமான' ஒன்றல்ல. பொது அரங்கிலான தகவல்கள் மட்டுப்பாடானவை அல்லது வேண்டுமென்றே மட்டுப்படுத்தப்பட்டவை என்பதோடு, பாதிப்புறும் மக்களின் எண்ணிக்கை மிகப் பாரியதாக விளங்குகையில் சட்ட மற்றும் பிரமாணப்படுத்தல் சூழமைவு சிக்கலானதாயிருப்பதும், வெளிக்கள ஆய்வு காலத்தினாலும், ஆற்றலினாலும் மாத்திரமன்றி, பாதிப்புறும் சமூகங்களில் UDA கருவி காரண அமைப்புகளால் ஏற்படுத்தப்படும் பீதி, தயக்கம் மற்றும் சந்தேக உணர்வுகள் காரணமாக ஏற்படும் மட்டுப்பாடுகளால் பாதிப்புற்றிருப்பதும் இதற்குக் காரணமாகும். எவ்வாறாயினும், கொழும்பின் பல்வேறு பகுதிகளில் பாதிப்புற்ற பிரஜைகளுடன் இடம்பெற்ற நேர்முகங்களிலிருந்தும், மூன்று வேறுபட்ட சமூகங்களினதும் அனுபவங்களைக்கொண்ட சுருக்கமான நிகழ்வு ஆய்வுகளிலிருந்தும் விடயங்களைப் பெற்றுக்கொண்ட அறிக்கை பலவந்த வெளியேற்றங்கள் குறித்த பிரதான விவகாரங்களையும், கரிசனை விடயங்களையும் உருவரைக்குறிப்பாகத் தெரிவிக்கின்றது.

ஆகவே, இந்த அறிக்கை சிந்தனையைத் தூண்டுவதும், கல்விமான்கள், ஆய்வாளர்கள், சிவில் சமூகம் மற்றும் மனித உரிமை அமைப்புகள், சகல அரசியல் கட்சிகள் மற்றும் வெகுஜன ஊடகங்களுக்கு பலவந்த வெளியேற்றங்கள் குறித்தும், அவற்றை முன்செலுத்தும் அரசியல், பொருளாதார, சட்ட மற்றும் நிறுவனப் பொறிமுறை அமைப்புகளின் தாற்பரியம்குறித்து உடனடிக் கவனம் செலுத்துமாறு விடுக்கப்படும் அழைப்புமாகும்.

அபிவிருத்தியில் விளைவுகள் மற்றும் வழிமுறைகளின் முக்கியத்துவத்தை மறுக்க முடியாது. கொழும்பில் பலவந்த வெளியேற்றங்கள் மற்றும் தன்விருப்பற்ற மீள் குடியேற்றங்கள் சூழமைவில் சில தனிநபர்களும், குடும்பங்களும் எவ்வாறு தமது மீள் குடியேற்ற நியதிகளுடனும், வாழிடம் இடமாற்றம் செய்யப்படுவதுடனும் திருப்தியடைந்துள்ளனர் என்பதைத் தெரிவிக்கும் குறுகிய விளைவுக் கணிப்பீடுகள் குறித்தும் CPA எச்சரிக்கை செய்கின்றது. இது உண்மையாக இருக்கக்கூடுமென்ற போதிலும், இத்தகைய தனிநபர் அடிப்படையிலான சிறு பத்திரிகை மற்றும் சிதிலமடைந்த கணிப்பீடுகளில் ஒரு தெளிவான ஆபத்து உள்ளது.[1] இங்கு அபாயநிலையில் காணப்படுவது ஜனநாயகம், சமூக நீதி, சட்டத்தின் ஆட்சி, மற்றும் அரசியலமைப்பு ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் என்பவையாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், குடியுரிமையே ஆபத்திலுள்ளது.

[1] உண்மையில், இத்தகைய கண்ணோட்டத்தைச் சமநிலைப்படுத்துவதற்கு ஒருவர் சமீபத்தில் இடம்பெற்ற மேல் மாகாண சபைத் தேர்தலில் கொழும்பில் ஆளும் கூட்டணிக்குக் கிடைத்த கணிசமான தோல்வியைப் பார்த்தாலே போதுமானதாகும்.

# பகுதி 1 : கொழும்பில் நகர்ப்புற புத்தாக்கமும், மக்கள் வீடுகளிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்படுதலும்: அரசியல் மற்றும் கொள்கைச் சூழமைவு

## அறிமுகம்

*“2020 அளவில் கொழும்பு மாநகரில் சேரிகளில் வாழ்வோர் இருக்கமாட்டார்கள்”*
*- மஹிந்த சிந்தனை, 2010*[2]

2010ஆரம்பப் பகுதியில், நாடளாவிய தேர்தல் வெற்றிக்குப் பின்னர் ஜனாதிபதி ராஜபக்ஷ நகர அபிவிருத்தி அதிகாரசபையை (UDA) பாதுகாப்பு அமைச்சின் விடய எல்லைக்குள் கொண்டுவந்தார். அதன்பின்னர் விரைவிலேயே 2010 மே ஆரம்பப் பகுதியில் UDA இராணுவத்தின் உதவியுடன் தனது முதலாவது வெளியேற்றல்களை ஆரம்பித்தது. ஆயுதந்தரித்த இராணுவச் சிப்பாய்களின் உதவியுடன் புல்டோஸர்கள் கொழும்பு, கொம்பனித்தெரு, மிவூஸ் வீதியில் வசித்த சிறிய, கீழ் மத்தியதர வர்க்க ஜனசமூகத்தின் வீடுகளையும், வியாபாரக் கட்டிடங்களையும் இடித்துத் தரைமட்டமாக்கின.[3] இறுதியாக அவர்களின் வீடுகள் இருந்த இடத்தில் இராணுவ உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான பாடசாலையொன்று அமைக்கப்பட்டது. வதிவாளர்களுக்கு முறையான அறிவித்தல் எதுவும் வழங்கப்படவில்லை. நஷ்ட ஈடுகள் வழங்கப்படவில்லை. இப்பொழுது அனேகமாக நான்கு வருடங்கள் கழிந்துவிட்ட நிலையில், அவர்களுக்கு இன்னமும் வாக்களித்தபடி மாற்று வாழிடங்கள் வழங்கப்படவில்லை (பகுதி IIஇல் மிவூஸ் வீதி விடய ஆய்வைப் பார்க்கவும்).

இப்பொழுது இலங்கையில் நகர்ப்புற அபிவிருத்தியைத் தலைமைதாங்கி வழிநடத்தும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ கொழும்பை ஒரு சேரிகளற்ற, “உலக தரத்திலான” “மலர்த் தோட்டமாக”; “சர்வதேச வியாபாரத் தொழிலுக்கும், சுற்றுலாவுக்குமான ஒரு விருப்புச் சேரிடமாக” நிலைமாற்றம் செய்வதே தனது குறியிலக்கு என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறிவருகின்றார்.[4] இதைத்தான் UDAயின் நகர்ப்புறப் புத்தாக்கக் கருத்திட்டம் (URP) சாதிக்க விழைகின்றது. URPயின் பூரண விபரங்கள் உத்தியோகபூர்வமாகப் பகிரங்கப்படுத்தப்படாத அதேவேளையில், அது நகரத்திலுள்ள ஆயிரக்கணக்கான வறிய மற்றும் கீழ்-நடுத்தர வருமானங்கொண்ட குடும்பங்களைப் பலவந்தமாக மீள்குடியேற்றம் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பது இப்பொழுது துரிதமாகத் தெளிவாகிவருகின்றது. அடுத்த ஒருசில வருடங்களில் பலவந்தமாக வாழிடம் இடமாற்றம் செய்யப்படவுள்ள

---

[2] ‘இலங்கை – ஆசியாவின் பரிணமிக்கும் அதிசயம்’ மஹிந்த சிந்தனை – எதிர்கால இலட்சியம்: அபிவிருத்திக் கொள்கைச் சட்டகம், இலங்கை அரசாங்கம், தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, 2010, பக்.175. மஹிந்த சிந்தனை 2010க்குப் பின்னர்.

[3] சண்டே டைம்ஸ், “மிவூஸ் வீதியிலிருந்து வெளியேற்றப்படுவோருக்கு UDA மாதம் 8,000/- ரூபா வழங்க விருப்பம்” 16 மே 2010 மற்றும் டெயிலி FT “கொழும்பு மாநகரில் வெளியேற்றப்படுவோர் பிரச்சினைகளை ரணில் கிளறுகின்றார்” – 06 நவம்பர் 2013

[4] ‘கொழும்பு மாநகருக்கான அபிவிருத்தித் திட்டங்கள்’ சுஜாதா ஜயவர்தன நினைவுப் பேருரை, பாதுகாப்புச் செயலாளர் திரு. கோத்தாபய ராஜபக்ஷ, 2011

குடும்பங்களின் எண்ணிக்கை “கிட்டத்தட்ட 70,000[5]இலிருந்து 135,000[6]” வரையாகும். ஒரு சராசரி நகர்ப்புறக் குடும்பத்தின் அளவு 4.2[7] என அனுமானிக்கையில் இதன் உட்கருத்து 280,000க்கும், 500,000க்கு மேற்பட்டதற்குமிடையிலான எண்ணிக்கையிலான மக்களை வாழிடம் இடமாற்றம் செய்தலின் அளவு மற்றும் சிக்கலையும், பரந்த வீச்சிலான சமூக, பொருளாதார இடர்வரவுகளையும் குறிப்பதாகும்.

பெரிதும் அரசு கட்டுப்பாட்டிலுள்ள வெகுஜன ஊடகங்களிலும், பொது அரங்குகளிலும் கொழும்பைச் சேரிகள், குடிசைகளற்ற, அழகான நகரமாக்கும் URPயின் நோக்கம் முடிவற்றவகையில் எடுத்துரைக்கப்பட்டுவரும் அதேவேளையில், உதாரணமாக வேறு பல தெற்காசிய நகரங்களைப் போலன்றி, கொழும்பில் பாரிய, பரந்த சேரிகள் எப்பொழுதுமே இருந்ததில்லை. 2001இல் கொழும்பு மாநகர சபையினாலும், செவனத்த நகர்ப்புற மூலவள நிலையத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட ஒரு மதிப்பாய்வு கொழும்பு நகரில் 1,614 குறைந்த வருமானக் குடியேற்றங்களில் மொத்தம் 77,612 குடும்பங்கள் வசிப்பதாக இனங்கண்டது.[8] எவ்வாறாயினும், முக்கியமாக இந்த மதிப்பாய்வில், “இனங்கண்ட சகல குறைந்த வருமானக் குடியேற்றங்களையும் சேரிகளென்று வகைப்பிரிவுபடுத்துவது கடினம்”[9] என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் அது ஏனைய பெரிய தெற்காசிய நகரங்களைப்போலன்றி, கொழும்பின் குறைந்த வருமானக் குடியேற்றங்கள் ஒப்பீட்டளவில் சிறிய கொத்தணிகள் என்றும், அவற்றுள் 74 வீதமானவை 50 வீட்டு அலகுகளைவிடக் குறைவானவையென்றும், கொழும்பிலுள்ள மொத்தக் குறைந்த வருமானக் குடியேற்றங்களுள் சுமார் 0.7 வீதமானவையே 500க்கு மேற்பட்ட வீடுகளைக் கொண்டவையென்றும் கண்டறிந்தது.[10] எவ்வாறாயினும், இக்குடும்பங்களில் 25 வீதத்துக்கும் குறைவானவர்களே உடைமை உரிமைகளைக் கொண்டிருப்பதோடு, இந்த மக்கட் தொகையினரில் அரைவாசிக்கு மேற்பட்டோர் குடியிருப்புப் பாதுகாப்பு இல்லாதோராகவே உள்ளனர்.[11]

## தேசிய வீடமைப்புக் கொள்கையும், கொழும்பின் நகர்ப்புறப் புத்தாக்கக் கருத்திட்டமும்

கொழும்பின் குறைந்த வருமானக் குடியேற்றங்களுக்குக் கணிசமான அளவு உயர் மட்டங்களிலான சேவை வழங்கல்கள் அவசியமென்பதிலும், இவர்களுக்குப் போதிய அளவிலான வீடமைப்பு, பாதுகாப்பான குடியிருப்பு உரிமை மற்றும் உரித்துரிமைகள் இல்லாத நிலைமை விசனத்துக்குரியது என்பதிலும் எதுவித சந்தேகமுமில்லை.

---

[5] தி ஐலன்ட், “கொழும்பு மலர்த்தோட்ட நகராகவுள்ளது, 70,000 குடும்பங்கள் மீள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்: கோத்தா”, 20 மார்ச் 2013

[6] Defence.lk, “கொழும்பு உபநகர்ப் பகுதிகளில் சேவைகள் குறைவான குடியேற்றங்களை மீள் இடமாற்றம்செய்யும் சாத்தியக்கூறுகள்” 2 பெப்ருவரி 2013

[7] குடியிருப்பு வருமான, மற்றும் செலவு மதிப்பாய்வு – 2009/10, பூர்வாங்க அறிக்கை, குடிசன மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், இலங்கை அரசாங்கம்

[8] கொழும்பு என்னும் விடயம், இலங்கை, செவனத்த

[9] அதே இடம் பக்கம் 6

[10] அதே இடம் பக்கம் 7

[11] அதே இடம் பக்கம் 10

எவ்வாறாயினும், தேசிய[12] மற்றும் சர்வதேச[13] தரநியமங்களிலான உரித்துரிமைகள் மற்றும் தன்விருப்பற்ற வாழிட இடமாற்றுக் கொள்கைகள்குறித்த அனைத்துமடங்கும் சட்டகம் எதையுமே கொண்டிராத URP மேலும் சிறப்பான வீடமைப்பு மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான முன்நிபந்தனையாக வாழிட இடமாற்றத்தை ஏற்றுக்கொள்வதை வலியுறுத்துகின்றது. வீடமைப்பு சம்பந்தமான URPயின் அணுகுமுறை தேசிய வீடமைப்புக் கொள்கை வரைபில், அதன் மட்டுப்பாடுகள் இருந்தவேளையிலும், தெரிவிக்கப்பட்டுள்ள பல ஆக்கபூர்வமான அம்சங்களுக்கு நேர்முரணாகவுள்ளது. UDA NHPயின் அணுகுமுறையை முற்றாகவே உதாசீனம் செய்வது UDAயின் அதிகார வலுவையும், பகட்டான உரைகளுக்கும், நடைமுறைகளுக்குமிடையில் காணப்படும் பாரிய இடைவெளியையும் எடுத்துக் காண்பிப்பதாகவே உள்ளது.

தேசிய வீடமைப்புக் கொள்கை "தமது சொந்த வீடுகளைக் கட்டும் ஆற்றல்கொண்ட குடும்பங்களுக்குக் காணியைப் பிரமாணப்படுத்துதல், அடிப்படை வசதிகளை வழங்குதல், அவசியமான தொழில்நுட்ப வழிகாட்டலுடன் சலுகை வட்டி வீதங்களில் வீடமைப்பு உதவிக் கடன்களை வழங்குதல்" என்பவற்றை அவசியப்படுத்துகின்றது.[14] ஆயினும், குடும்பங்களுக்கு அந்த இடங்களிலேயே குடியிருப்பு உரிமைகளைப் பிரமாணப்படுத்தி, அவர்கள் தமது சொந்த வீடுகளை அமைத்துக்கொள்வதற்கு உதவுவதற்குப் பதிலாக, இவ்வாறாக அவர்களின் சொந்த ஜனசமூகங்களுக்குச் சமூக, பொருளாதார மதிப்பை உயர்த்திக்கொள்ள உதவுவதற்குப் பதிலாக, UDA கிரமமற்ற குடியிருப்பு என்பதைப் பயன்படுத்தி நஷ்ட ஈடு எதுவுமின்றி மக்களிடமிருந்து வீடுகளைப் பிடுங்கிக்கொள்ளும் அதேவேளையில், வாழிட இடமாற்ற வீடமைப்புக்கு அவர்களே பணம் செலுத்தவேண்டுமென்றும் பலவந்தம் செய்கின்றது. இது கட்டமைப்புசார், சொத்துகள் மற்றும் வருமானங்கள் பாதிப்புற்ற உரித்துரிமைகள் இல்லாதோருக்கும், பதிவுபெறாத வியாபாரத் தொழில்களின் சொந்தக்காரர்களுக்கும்கூட நஷ்ட ஈடுகள் வழங்கப்பட்ட தெற்கின் அதிவேக வீதி விடயத்துக்கு நேரெதிராகவுள்ளது.[15] தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகரிக்கப்பட்ட தன்விருப்பற்ற மீள்குடியேற்றங்கள் சம்பந்தமான அம்சங்கள் மற்றும் செயல்முறைகள்குறித்த அனைத்துமடங்கும் உரிமைகள் மற்றும் உரித்துரிமைகள் சட்டகமொன்று URPயின் ஒரு பகுதியாக இல்லாதிருப்பது கொழும்பிலுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஒரு பாரதூரமான அச்சுறுத்தலாகவுள்ளது.

தேசிய வீடமைப்புக் கருத்திட்டம் குறித்துரைப்பாக "வீடமைப்பு அபிவிருத்தியில் ஜனசமூகப் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கு ஜனசமூக அடிப்படையிலான அமைப்புகளை வலுப்படுத்துவதற்கும், வறிய ஜனசமூகங்களைத் தீர்மானம் மேற்கொள்ளும்

---

[12] உதாரணமாக, ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியளித்த தெற்கு அதிவேக வீதிக் கருத்திட்டம் சம்பந்தமான, துறைமுகங்கள், பெருந்தெருக்கள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட இலங்கையில் தன்விருப்பற்ற வாழிட இடமாற்றம் சம்பந்தமான தேசியக் கொள்கையைப் பார்க்கவும்.

[13] இவை அபிவிருத்தி காரணமாக ஏற்படும் இடம்பெயர்தல் சம்பந்தமான ஐ.நா. வழிகாட்டல்கள் மற்றும் உலக வங்கி போன்ற முகவர் நிலையங்களின் தன்விருப்பற்ற மீள்குடியேற்றக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

[14] தேசிய வீடமைப்புக் கொள்கை வரைபு, பக். 10

[15] இலங்கையில் தன்விருப்பற்ற மீள்குடியேற்றம் சம்பந்தமான தேசியக் கொள்கை; ஆசிய அபிவிருத்தி வங்கிக்காக துறைமுகங்கள், பெருந்தெருக்கள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டது.

செயல்முறைகளில் வழிநடத்துவதற்கும்'' அழைப்பு விடுக்கின்றது. NHP ''குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீடமைப்பு அபிவிருத்தியில் பங்கேற்பு முறையியல்கள், ஆற்றலைக் கட்டியெழுப்புதல், மற்றும் அதிகார வலுவளித்தல்குறித்த அணுகுமுறைகளை வலியுறுத்தாதிருத்தல்;''[16] இலங்கையில் வீடமைப்புக் கொள்கையில் ஒரு பாரதூரமான பிரச்சினையாகவுள்ளது.

எவ்வாறாயினும், வாழிட இடமாற்றம் சம்பந்தமான சம்மதம் அல்லது விருப்புத்தெரிவு ஒருபுறமிருக்க, பொதுவாக நகர்ப்புறப் புத்தாக்கக் கருத்திட்டத்திலும், குறிப்பாக வாழிட இடமாற்றச் செயல்முறையிலும் தகவலுக்கான அணுகுவழி மற்றும் அர்த்தமுள்ள பொதுமக்கள் கலந்தாலோசனை என்பவை இல்லாத நிலையே காணப்படுகின்றது. பகிரங்கப்படுத்தப்படாத மதிப்பாய்வுகளும், வெளியேற்றங்களை எதிர்நோக்கும் ஜனசமூகங்கள் திரு. கோத்தாபய ராஜபக்ஷ உள்ளிட்ட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுடனும், UDA அதிகாரிகளுடனும் ஒருதடவை நடாத்திய கூட்டமும் 'கலந்தாலோசனை'யென்று எடுத்துக் காண்பிக்கப்படுகின்றன. மீள்குடியேற்ற இட அமைவுகளை வடிவமைப்பதிலும், அபிவிருத்திசெய்வதிலும் பங்கேற்பதற்கு ஜனசமூகங்களுக்கு ஆற்றலளிப்பது ஒருபுறமிருக்க, செங்குத்துக் கோபுரங்களான சகல புதிய வீடமைப்புகளும் ஜனசமூகங்களின் குறித்துரைப்பான தேவைகள் கணிப்பீடு செய்யப்படுவதற்கு அல்லது தீர்மானிக்கப்படுவதற்கு வெகுகாலத்துக்கு முன்னராகவே வடிவமைக்கப்பட்டு, கட்டப்பட்டு[17] வருகின்றன.

இத்தகைய அனைத்துக்கும் ஒரே அளவில் பொருந்தும் அணுகுமுறை கடந்த காலத்திலும் ஒரு தோல்வியாகவே முடிவடைந்துள்ளது. உதாரணமாக, சேரிகளிலிருந்து வாழிட இடமாற்றம் செய்யப்பட்டவர்களுக்கான, வட-கிழக்குக் கொழும்பில் ஒரு தனிக் கோபுரத் தொகுதியாகிய சஹஸ்புரவின் வதிவாளர்கள் சம்பந்தமான 2010ஆம் ஆண்டின் ஓர் ஆய்வு, ''மீள் குடியேற்றச் செயல்முறை சமூக இழைமானச் சீர்குலைவுக்குத் தீர்வுகாணத் தவறியமையாலும், சமூகத் தொடர்பின்மையைத் தடுப்பதற்கான உத்திகளை ஒன்றிணைக்கத் தவறியமையாலும் தனது இலக்குகளை ஈட்டிக்கொள்ளவும், கிரமமற்ற வருமானம் சம்பாதிப்போரின் வாழ்வாதாரங்கள்குறித்த சமூக-பொருளாதார அம்சங்களிலும், அவர்கள் நாணயக் கடன் பெறுவதற்கான அணுகுவழிகள்குறித்த பிரச்சினைகளில் கவனஞ்செலுத்தவும் தவறிவிட்டது'' என்று முடிவுசெய்தது.[18]

---

[16] தேசிய வீடமைப்புக் கொள்கை வரைபு. பக். 4

[17] பின்வரும் வாழிட இடமாற்ற இட அமைவுகளில் அடிப்படையில் செங்குத்துக் கோபுரங்களான ''வீடமைப்புத் தொகுதிகள்'' நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன: ஹேனமுல்ல, அளுத்மாவத்த, பெர்கூசன் ரோட், சிரில் சி. பெரேரா மாவத்தை, எதிரிசிங்க மாவத்தை, மாளிகாவத்தை CGR காணி, தெமட்டகொடை CGR காணி, எஸ்டேட் 31-ஒறுகொடவத்தைப் பக்கம், எஸ்டேட் 54 மற்றும் 56, அரசாங்கத் தொழிற்சாலைக் காணி-கொலன்னாவை, சலமுல்ல மற்றும் அங்கொடை. இவற்றுள் தற்போது மிஹிந்து சென்புர என அழைக்கப்படும் தெமட்டகொடை தயாராகவிருப்பதோடு, நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. <http://www.uda.lk/investment_relocation.html>ஐப் பார்க்கவும்.

[18] அபிவிருத்தி நோக்கு மீள்குடியேற்றக் கருத்திட்டங்களின் தோல்விக்குப் பங்களிப்புச்செய்த காரணிகள்: சஹஸபுர சேரி வாழிட இடமாற்றம்குறித்த ஒரு விடய ஆய்வு, கொழும்பு, இலங்கை, எஸ்.எல். தம்மிகா, கே. விஜயசிங்க, முதுமாணிப்பட்ட ஆய்வுக்கட்டுரை, ரொட்டர்டாம் இரேஸ்மாஸ் பல்கலைக்கழகத்தின் நகர்ப்புற முகாமைத்துவச் சர்வதேச நிறுவகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. பக். 55

## இராணுவமயமாக்கலும், ஜனநாயகம் படிப்படியாகச் சிதைவடைதலும்

கொழும்பின் நகர்ப்புறப் புத்தாக்கக் கருத்திட்டத்தின் பாரதூரமான ஜனநாயகக் குறைபாடுகள் காணி உரிமைகள் மற்றும் உரித்துரிமைகளைப் பாதுகாப்பதிலும் சரி, ஒளிவுமறைவின்மையையும், பங்கேற்பையும் உறுதிசெய்வதிலும் சரி, இலங்கையில் மாநகரசபை மட்டங்கள் உள்ளிட்டவரையில், ஆட்சிமுறையில் யுத்தத்துக்குப் பிந்திய இராணுவமயமாக்கலோடு பிரிக்கமுடியாதவாறு இணைப்புற்றுள்ளன. இராணுவம் கொழும்பின் சகல இடங்களிலும் பிரசன்னமாகவிருப்பதோடு, மேலும் சாதாரணமாக மாநகர சபையொன்றுடன் தொடர்புற்ற இயற்கை வனப்பூட்டல், கட்டிட நிர்மாணம், சுத்திகரிப்பு போன்ற பல பணிகளில் ஈடுபட்டுள்ளது.[19] கவனமற்ற பாதசாரிகளுக்குத் தண்டம் விதித்தல், 'சூழல் கண்காணிப்பு' மற்றும் நகருக்கான அணுகுவழியைக் கட்டுப்படுத்துதல்வரை பல்வேறு ஒழுக்காற்று நடவடிக்கைமுறைகள் செயற்படுவதோடு, பொது இடங்கள் தொடர்ச்சியாகக் கவனக் கண்காணிப்புக்குட்படுத்தப்படுகின்றன.

UDAயினுள்ளும், அதனூடாகவும் செயற்படும் இராணுவம் வெளியேற்றங்கள் மற்றும் வாழிட இடமாற்றச் செயல்முறையையும் கூட்டிணைப்புச்செய்கின்றது. பாதிப்புற்ற வதிவாளர்கள், தாம் மாநகர சபையையோ அல்லது ஏனைய முகவர் நிலையங்களையோவிட இச்செயல்முறையை மேற்பார்வைசெய்யும் சிரேஷ்ட இராணுவ உத்தியோகத்தர்களையே சந்தித்துத் தமது வேண்டுகோள்களையும், மனக் குறைகளையும் தெரிவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டதாக மாற்றுக்கொள்கைகள் நிலையத்துக்குத் தெரிவித்துள்ளனர். வாழிட இடமாற்றத்துக்கு முன்னரும், பின்னரும் தாம் பொலீஸ் மற்றும் இராணுவ ஆளணியினர் சம்பந்தமுறும் உயர்மட்டங்களிலான தீவிர கவனக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தனர். இடித்தழிப்பு வேலைகளின்போதும், அதற்குப் பின்னரும் இராணுவ ஆளணியினர் துடிப்பாகச் செயற்படுவதை CPA ஆய்வாளர்களும் அவதானித்துள்ளனர்.

விரிவாக்கம் பெற்றுவரும் இராணுவத்தின் பாத்திரத்துக்குமப்பால், இலங்கையில் நகர்ப்புற ஆட்சிமுறையின் சூழமைவில் இராணுவமயமாக்கல் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மீளொழுங்குபடுத்தலில் ஒரு மேலும் விசாலமான புலன்காட்சியாகப் புரிந்துகொள்ளப்படுதல் வேண்டும்.[20] யுத்தம் முடிவடைந்த பின்னர் சுமார் 2 வருட காலமாக ஒரு தொடரான அவசரகாலநிலைப் பிரமாணங்களின்கீழ் கொழும்பு மாநகர சபைத் தேர்தல் பின்போடப்பட்டவேளையில் (CMC), நகர அபிவிருத்தி அதிகார சபையைப் பாதுகாப்பு அமைச்சின்கீழ்க் கொண்டுவந்தது பிரதானமாக ஜனநாயக உரிமைகளின் பிரயோகத்தை மட்டுப்படுத்தும் நோக்கத்தையும் கொண்டிருந்தது. இது

---

[19] பகுப்பாய்வுக்கு, மேலாதிக்கத்தை வலுப்படுத்துதல்: யுத்தத்துக்குப் பின்னரான கொழும்பின் நகர்ப்புற நிலைமாற்றத்தின் அரசியல், பொருளாதார மற்றும் அரசியல் வாராந்த சஞ்சிகை, பாகம் xlvlil, இல. 34ஐப் பார்க்கவும்.

[20] பகுப்பாய்வுக்கு, பி. ஸ்கந்தகுமார், அசமத்துவ நிலையில் வளர்ச்சி: இலங்கையில் நவதாராள வாதத்தின் அரசியல் பொருளாதாரம், வறுமை ஒழிப்புக்கான தெற்காசியக் கூட்டணிக்கான தேச ஆய்வறிக்கை (SAAPE) தெற்காசியாவில் நெருக்கடிகள், இலகுவில் பலியாகும்நிலை மற்றும் வறுமை, 2013ஐப் பார்க்கவும்.

விடயத்தில், CPA உள்ளிட்டவகையில் வழக்குத் தொடர்ந்தவேளையில், அவ்வழக்கை உயர் நீதிமன்றம் விசாரிக்க ஆரம்பிக்கும்வேளையிலேயே கொழும்பு மாநகர சபைக்கான தேர்தல் இடம்பெற்றது.[21]

UDA இராணுவத்தின் பாரிய மனித, நிதி, மற்றும் தொழில்நுட்ப மூலவளங்களின் ஆதரவுடன் கொழும்பு மாநகர சபையை ஒரு வெறும் சேவை வழங்குநராகத் தரக்குறைப்புச் செய்துள்ளது. உள்ளூராட்சிச் சபைக்குத் தெரிவுபெற்ற மக்கள் பிரதிநிதிகள் நகர்ப்புறப் புனராக்கக் கருத்திட்டம் சம்பந்தமாக எவ்வித அதிகாரமுமற்ற நிலையிலிருப்பதையும், இராணுவ/UDA கட்டுப்பாட்டின் விஸ்தாரத்தையும் வைத்து நோக்குகையில், முழுக் காணிச் சுவீகரிப்பு மற்றும் வாழிட இடமாற்றச் செயல்முறை ஜனநாயக நிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. இது பயனுறுதியளவில் இந்த விடயத்தில் செல்வாக்குச் செலுத்த எண்ணும் பாதிப்புற்ற ஜனசமூகங்களினதும், அவர்களின் அரசியல் பிரதிநிதிகளினதும் முயற்சிகளைச் செல்லாக்காசாக்கியுள்ளது. அரசியல் பிரதிநிதிகள் 'சம்பந்தமுறுவது' UPFA ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதுவும் வெறும் வைபவரீதியானதும், ஜனசமூகங்கள் (புதிய வீடுகளுக்கான ஆரம்ப முதல் கொடுப்பனவுகளில் உதவி போன்ற) நிவாரணங்களுக்கு அல்லது மனக்குறைகள் (வாழிட இடமாற்றப் பகுதிகளில் வீடுகள் ஒதுக்கீடுகளில் தவறுகள் போன்றவை) சம்பந்தமாக உதவிகள் போன்றவற்றுக்கு விண்ணப்பிக்கும்போது தமது ஆதரவு வலையமைப்புகளை வலுப்படுத்தும் நோக்கத்தோடும் இடம்பெறுவதாகும்.

## கொழும்பில் மக்கள் வீடுகளிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்படுதலும், காணியின் அரசியல் பொருளாதாரமும்

மஹிந்த சிந்தனை 2010இல் உருவரைக் குறிப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதுபோன்று, நகர்ப்புற அபிவிருத்தியின் ஒரு குறிப்பான குறியிலக்காகிய அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கைச் சட்டகம், "தனியார் அபிவிருத்தியாளர்களூடாகக் கொழும்பு நகரிலுள்ள சேவைகள் குறைவாகப் பெற்றுக்கொள்ளும் குடியேற்றங்களின் நிலைமையை மேம்படுத்தி, பெறுமதிமிக்க காணிகளை வர்த்தக நடவடிக்கைகளுக்காக விடுவிப்பதாகும். இச்செயல்முறையூடாக நகர்ப்புறத்தில் நன்கு பயன்படுத்தப் படாதிருக்கும் பெறுமதிமிக்க காணிகள் தனியார் துறையினரால் அபிவிருத்திக்கும், வர்த்தக நோக்கங்களுக்கும் பயன்படுத்தப்படும்."[22] உண்மையில் இத்தகைய காணி 'விடுவிப்பு' அண்ணளவாக 350 ஏக்கர்கள் பெறுமதிமிக்க காணியை வர்த்தக மற்றும் கலப்புப் பயன்பாட்டு உபயோகத்துக்கு விடுவிக்குமென்று மஹிந்த சிந்தனை வெளிப்படையாகவே தெரிவிக்கின்றது. "2015 அளவில் 40,000 தொடர்மாடி அலகுகள்

---

[21] கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து *எதிர்* மஹிந்த தேசப்பிரிய (SC FR 251/2011) வழக்கைப் பார்க்கவும். டெயிலி மிரர், "உயர் நீதிமன்றத்தில் கொழும்பு மாநகர சபைத் தேர்தலுக்கான அடிப்படை உரிமைகள் மனு சமர்ப்பிப்பு", 21 ஜுன் 2011ஐயும் பார்க்கவும்.

[22] மஹிந்த சிந்தனை: ஒரு பத்து வருட அடிவான அபிவிருத்திச் சட்டகம் 2006-2016. கலந்துரையாடல் ஆய்வுக்கட்டுரை, பக்கம் 115

சேரிவாழ் மக்களுக்கென நிர்மாணிக்கப்படுவதோடு, 20,000 சொகுசு மற்றும் அரைச்சொகுசு தொடர்மாடி வீடுகள் முன்னர் சேவைகள் குறைவாக வழங்கப்பட்ட பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படும்.''[23]

மேலும், இக்காணிகள் ''நன்கு பயன்படுத்தப்படாதிருப்பது''குறித்து விளக்கமாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஊன்றிக் கவனித்து வாசிக்கும்போது, இக்காணிகள் தனியார் வர்த்தக நோக்கங்களுக்குக் கிட்டாது என்பதே இதன் உண்மையான உட்கருத்தாகும். நன்கு பயன்படுத்தப்படாதிருக்கும் பெறுமதிமிக்க நகர்ப்புறக் காணிகளைத் தனியார் துறைக்குக் கையளிப்பதென்பது, பல தசாப்த காலங்களாகப் பல சந்தர்ப்பங்களில் வறிய மற்றும் கீழ்-நடுத்தர வருமானமுள்ள ஜனசமூகங்களுக்கு இல்லங்களாக அமைந்த இவற்றை இவ்வாறு கையளிப்பது ''வறியவர்களுக்கு 40,000 தொடர்மாடி அலகுகள்'', ''20,000 சொகுசு மற்றும் அரைச்சொகுசு தொடர்மாடி வீடுகளுக்கு'' சமம் என்று தெரிவிப்பதாகும். இது ஒருவாறு நடைமுறையாகினால், இதன் ஒரு முறைமையான ஆகுசெலவு-அனுகூலப் பகுப்பாய்வு மற்றும் URPயின் ஏனைய பரிமாணங்கள் ஒருபோதும் பாராளுமன்ற, மாநகர சபை விவாதங்களுக்கோ, அல்லது பொது அரங்கின் நுண்ணாய்வுக்கோ உட்படுத்தப்படவில்லை.

தனியார் அபிவிருத்தி மற்றும் மூலதனத்தில் தங்கியிருப்பதை நோக்கிய நகர்வு மஹிந்த சிந்தனையில் ''வீடமைப்புத் துறையில் அரசாங்கத்தின் பாத்திரம் அபிவிருத்தியாளர் மற்றும் நிதி வழங்குநர் என்பதிலிருந்து தொடர்ந்தும் பிரமாணப்படுத்துநர் மற்றும் ஏற்பாட்டாளர் என்ற நிலைக்கு நகரும் தற்போதைய போக்குத் தொடருமென்ற கூற்றின் ஒளியில் பார்க்கப்படுதல் வேண்டும். உத்தி வீடமைப்பு முதலீடுகள் இன்னமும் அரசினால் மேற்கொள்ளப்படக்கூடும். குறிப்பாக இலகுவில் பாதிப்புறக்கூடிய மக்கட்தொகையினரை இலக்குவைப்பவையும், அவசரத் தேவைகளுக்குத் தீர்வுகாண்பவையும் இவ்வாறான முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடும். எவ்வாறாயினும், வீடமைப்பு அபிவிருத்திக்கான உசிதமான விருப்புத்தெரிவுகள் தனியார் துறையின் துடிப்பான ஈடுபாட்டினூடாகவே ஆகும்.''[24] (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டுள்ளது)

'அபிவிருத்தியாளர் மற்றும் நிதி வழங்குநர்' என்ற பாத்திரத்திலிருந்து ஒதுங்கிக் கொள்வதன் மற்றும் தனியார் துறையின் நடுநாயகத் தன்மையை வலியுறுத்துவதன் ஒரு நேரடி விளைவு வீடமைப்பும், மேலும் காணியும் முதனிலை நிதிப் பெறுமதிகொண்ட வெறும் நுகர்வுப் பொருட்களாகத் தரங்குறைக்கப்படுவதும், அதன் சமூகப் பெறுமதி, மக்களின் உரிமை மற்றும் உரித்துரிமைகள் மற்றும் அவை குறிக்கும் அரசின் கடப்பாடுகள் இல்லாதொழிக்கப்படுவதுமாகும். இவ்வாறே 'பிரமாணப்படுத்துநர் மற்றும் ஏற்பாட்டாளர்' என்றவகையில் அரசின் பாத்திரம் தெளிவாகவே வரைவிலக்கணப்படுத்தப்பட்டதாகும்; அது மக்களின் உரிமைகள்,

---

[23] மஹிந்த சிந்தனை 2010, பக். 174
[24] மஹிந்த சிந்தனை 2010, பக். 174

உரித்துரிமைகளைப் பாதுகாப்பதை உறுதிப்படுத்துவதன்றி, தனியார் மூலதனத்துக்குக் ‘‘கவர்ச்சிகரமான ஊக்குவிப்புகளும், அவர்களுக்குச் சாதகமான ஒரு கொள்கைச் சூழல் உருவாகுவதையும் உறுதிப்படுத்துவதாகும். அபிவிருத்திக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களும், அங்கீகார நடவடிக்கைமுறைகளும் வசதியொழுங்குபடுத்தப்பட்டு, மேலும் வினைத்திறனுள்ளதாக்கப்படும்.’’[25]

இந்த விடயம் தீவிரமாகப் பின்பற்றப்படும். உதாரணமாக, பல மில்லியன் டொலர் சொகுசு, கலப்புப் பயன்பாட்டு ‘Transworks House’[26] மீளபிவிருத்திக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புகளை நோக்கலாம். இது (இந்திய கிறிஷ் குழுக் கம்பனியாகிய) தனியார் துறை அபிவிருத்தியாளருக்கு வெறும் 5 பில்லியன் இலங்கை ரூபாவுக்காக, 99 வருடங்களுக்குக் காணி குத்தகைக்கு வழங்கப்படுதல், 10 வருடத்துக்கு வருமான வரியற்ற, அதையடுத்த 15 வருடங்களுக்குச் சலுகை அடிப்படையிலான 6 வீத வரி, 11 வருடங்களுக்கு வரியற்ற பங்குவைத்திருப்போர் பங்குலாபங்கள் மற்றும் ஒரு வீச்சான ஏனைய வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகளிலிருந்து விதிவிலக்குகள் போன்றவற்றுடன் வழங்கப்படுகின்றது.[27] இவ்வாறே, ஏனைய தனியார் காணி மீள் அபிவிருத்தி முன்முயற்சியாளர்களையும் கொண்டுவருவதற்கான முயற்சிகள் உள்ளன. இது உத்தி அபிவிருத்திச் சட்டத்தின் சுற்றெல்லையின்கீழ் விடுதிகள், கசினோக்கள் என்பவை உள்ளடங்கும்விதத்தில் பிரமாண்டமான வரி அனுகூலங்கள்,[28] குறைக்கப்பட்ட பொருளாதார சேவை விதிப்பனவுகள், இறக்குமதிகள்மீதான குறைவான தீர்வைகள் என்பவற்றுடன் அவர்களை வரவழைப்பதற்கான முயற்சிகளாகும்.[29] மேலும், தனிநபர் விலைகோரல்கள், அல்லது போட்டியற்ற வழங்கல்கள் என்பவை சம்பந்தமான பல அபிவிருத்தி உரிமைகளை வழங்கும் செயல்முறையில் ஒளிவுமறைவின்மை காணப்படாமை சம்பந்தமான பல கரிசனைக் கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன. இதில் பாரிய அளவிலான ஊழல்கள் சம்பந்தமான சார்த்துதல்களும் இடம்பெற்றுள்ளன.[30]

வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், வெளிநாட்டு மற்றும் உள்ளூர் தனியார் முதலீட்டாளர்களுக்குப் பாரிய மானியங்கள், உதவிகளை, விசேடமாக எதுவித பராதீனமுமற்ற காணிகளையும், ஒரு பரந்த வீச்சிலான நிதி ஊக்குவிப்புகளையும், உத்தரவாதங்களையும் வழங்கியுள்ளமையை வைத்து நோக்கும்போது, அரசு உண்மையில் குடிமக்களுக்காகவன்றி, தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கே ‘அபிவிருத்தியாளராகவும், நிதி வழங்குநராகவும் செயற்படுகின்றது.

[25] மஹிந்த சிந்தனை 2010, பக். 176

[26] தி ஐலன்ட், “Krrish Lanka to partner Ritz Carlton”, 6 டிசம்பர் 2012

[27] லங்கா பிசினஸ் ஒன்லைன் “Sri Lanka Krrish project gets sweeping tax breaks”, 8 Oct. 2012

[28] சில விடய நிகழ்வுகளில் 25 வருடகால வரியற்ற அந்தஸ்து

[29] CalvinAyre.com, ‘‘கசினோக்களுக்கான இலங்கை அரசாங்கத்தின் உத்தேச வரிச் சலுகைகள்குறித்த விமர்சனம்’’ 16 மார்ச் 2013

[30] The Island, “Ranil queries lease of Fort land to KRRISH” 6 Nov. 2012. பதிலுக்கு The Island, “Minister explains Transworks property transfer to Krrish Group” 9 Nov. 2012 ஐப் பார்க்கவும்.

1978இல் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின்கீழ் (GCEC) தொழிலாளர் உரிமைகளுக்குப் பாதகமாக, வெளிநாட்டுக் கம்பனிகளுக்கும், மூலதனத்துக்கும் சாதகமாகப் பிரமாணங்கள் சரிவடையச் செய்ததுபோன்று, இன்று கொழும்பில் நகர்ப்புற அபிவிருத்தி குடிமக்களுக்கு விரோதமாக சக்திமிக்க உள்நாட்டு மற்றும் அனைத்துலக நிதி நலன்களுக்குச் சாதகமாகச் செயற்படுகின்றது. பொருளாதார ஜனநாயகத்துக்கான கூட்டுறவு அமைப்பு வாதிடுவதுபோன்று, ''கொழும்பில் நகர்ப்புற அபிவிருத்தியென்பது இடத்தை மீளொழுங்குபடுத்தி, நகரத்தை அழகுபடுத்தும் ஒரு பக்கஞ்சாராத செயற்பாடல்ல.'' மாறாக அது சக்திவாய்ந்த உலக மற்றும் உள்ளூர் மூலதன வலையமைப்புகளுடன் உள்ளூரத் தொடர்புற்ற ''நிச்சயமான அரசியல் நலன்களைப்'' பிரதிநிதித்துவம் செய்வதாகும்.[31] மேலும் கொழும்பிலுள்ள தனியார் நலன்களுக்குச் சாதகமான, காணி அபகரிப்பு சுற்றுலா, கைத்தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அல்லது பாதுகாப்பு என்பவற்றின்பேரில் நாடு முழுவதும் இடம்பெறும் 'காணிக் கொள்ளையின்' ஒரு பகுதியாகும் என்பதோடு, இதில் இராணுவமும் சம்பந்தமுற்று இச்செயல்முறையை இலகுபடுத்த உதவுகின்றது.[32] பெறுமதிமிக்க காணிகளின் பலவந்தச் சுவீகரிப்பும், பின்னர் அவை தனியார் நலன்களுக்கு ஒளிவுமறைவான முறைகளிலும், கேள்விக்கிடமான நியதிகளுடனும் கையளிக்கப்படுவதும் பொதுச் சொத்துகளை நிலையாகத் தனியார் கைகளுக்கு மாற்றும் ஒரு செயற்பாட்டைக் காண்பிக்கின்றது. இது அரசாங்க – தனியார் பங்குடைமைகள் என்ற பெயரில் இடம்பெற்றாலும், இது உண்மையில் ''திருட்டுத் தனமாகத் தனியார்மயப்படுத்துவதாகும்.''[33]

அபிவிருத்தி மீள்கூற்றுகளுக்கு மேலதிகமாக, வாழிட இடமாற்றங்களை நியாயப்படுத்துவதற்கு, விசேடமாகக் கொழும்பின் வறிய வதிவாளர்களுக்கு மேலும் சிறப்பான வீடமைப்பு மற்றும் வசதிகளை வழங்குவதற்கு நகர்ப்புறக் காணிகளின் தனியார் பயன்பாட்டிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் அவசியமென்று அடிக்கடி கூறப்படுகின்றது. ஆயினும், லோட்டஸ் கோபுரம், மற்றும் கொழும்புத் துறைமுக நகராக்கக் கருத்திட்டங்கள் போன்ற, பொதுமக்கள் பயன்பாடுகுறித்துப் பரிசோதிக்கப்படாத அல்லது கேள்விக்கிடமான இடாம்பீகக் கருத்திட்டங்களில் பாரிய

---

31 The Island: ''உலக தரத்திலான ஒரு கொழும்பை நோக்கி: ஜனநாயகம் இல்லாத அபிவிருத்தி'', 16 ஜூன் 2013

32 உதாரணமாக, கற்பிட்டித் தீவு வதிவாளர்களுக்குச் சொந்தமான உயிரளிக்கும் காணிகளின் கொள்ளை சம்பந்தமான அறிக்கை: கற்பிட்டித் தீவு ஜனசமூகங்களின் காணிக் கொள்ளை மற்றும் அதன் சமூக, கலாசார பொருளாதாரத் தாற்பரியங்கள் சம்பந்தமான விவகாரங்கள்குறித்த ஆய்வு, ஹேர்மன் குமார (Ed.), தேசிய மீன்பிடித்துறை ஒருமைப்பாட்டு இயக்கம் [NAFSO], ஏப்ரில் 2013 ஐயும்; பி. பொன்சேகா மற்றும் ஜெகதீஸ்வரன், ''இலங்கை வடக்கு-கிழக்கில் காணி சுவீகரிப்புகள் மற்றும் அது தொடர்பிலான பிரச்சினைகள் சம்பந்தமான அரசியல், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்'', மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், நவம்பர் 2013 ஐயும்; எம். ரஹீம், ''நீண்டகால இடம்பெயர்வு, அவசரத் தீர்வுகள்: இலங்கையில் நீண்டகால IDPகளுக்கான நிலையான தீர்வுகளுக்கான சாத்தியங்கள்'' CPA, 2013 ஐயும் பார்க்கவும்.

33 பி. ஸ்கந்தகுமார், ''சமத்துவநிலை இல்லாத வளர்ச்சி: இலங்கையில் நவதாராளவாதத்தின் அரசியல் பொருளாதாரம்'', வறுமை ஒழிப்பு நெருக்கடிகள், இலகுவில் பாதிப்புறுவோர் மற்றும் தெற்காசியாவில் வறுமை சம்பந்தமான தெற்காசியக் கூட்டணிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தேச ஆய்வறிக்கை, 2013.

அளவிலான கடன்கள் ஏற்பட்டுள்ளன. இவையிரண்டும் சீனாவிலிருந்து கிடைக்கும் பல மில்லியன் டொலர் கடன்களால் நிதியளிக்கப்படுபவையாகும். மிகவும் அவசியப்படும் வெள்ளக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நீங்கலாக, கடந்த மூன்று வருட காலமாக இடம்பெற்றுவரும் கொழும்பு நகர்ப்புற அபிவிருத்தி, நகரத்தை மீண்டும் உலக மூலதனம், சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு மையமாக மாற்றுவதிலேயே கவனம் செலுத்தும் ஒன்றாகும். இந்த 'மீள் அபிவிருத்தி' கணிசமான அளவிலான பொதுமக்களின் மூலவளங்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் உறிஞ்சுவதேயன்றி, சமூக அரவணைப்பையோ, ஒப்புரவையோ ஊக்குவதாக அமையவில்லை.

மேலும், அழகுபடுத்துதல் மீதான வலியுறுத்தல் அரசியல்ரீதியாகப் பக்கச்சார்பற்ற ஒன்றல்ல. குறிப்பாக அதிகாரத்தில் உள்ளவர்களே அதன் நியதிகளைத் தீர்மானிப்பதால், அது பக்கச்சார்புள்ளது என்பதோடு, இலட்சியக்காட்சியும், சுதேசியத் தன்மையும் அற்றதாகும். கொழும்பின் பரிணமிக்கும் நகர்ப்புறக் கட்புலக் காட்சிகளும், அழகியல் உள்ளமைப்பும், ஓர் உலகத் தரத்திலான நகரம் எவ்வாறு காட்சியளிக்க வேண்டும் என்னும் ஆதிக்கக் கருத்துகளின் தாக்கத்தினால் ஆழமாகச் செல்வாக்குச் செலுத்தப்படுபவையாகும்.[34] இது கொழும்பைச் சிங்கப்பூர் அல்லது ஷங்காய் நகரைப் போன்று நிலைமாற்றம் செய்யவேண்டுமென்று அடிக்கடி தெரிவிக்கப்படும் அபிலாஷையிலிருந்து பிரத்தியட்சமாவதாகும். இதில் உள்ளார்ந்த ரீதியாகக் காணப்படுவது, உண்மையான சமூக அரவணைப்பை முன்னேற்றுவதற்குப் பதிலாக, எல்லைகளை அழகுபடுத்தல்களும், பொதுக் கட்டிடங்கள் அல்லது பூங்காக்களின் சுற்றுமதில்களை அகற்றுவதுபோன்ற புறமொதுக்கல்களுமாகும்.[35] சகல பொது இடங்களிலும் போட்டிநிலை எவ்வாறிருப்பினும், கொழும்பில் பரிணமிக்கும் பொது இடங்கள் அனேகமான சந்தர்ப்பங்களில் "அளவுக்கதிகமாகத் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்படுபவை" என்றும், அவை "ஒரு குறிப்பிட்ட வருமானக் குழுவுக்கே பொருத்தமானவை" என்றும் குறிப்பிட்டு ஆவணமூலமற்ற பொது இடங்கள் அவசியமென வாதிடும் சமீபத்திய ஆய்வொன்று அனைவருக்குமான இடங்களை உருவாக்குவதாகக் கூறும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்கைகுறித்து வினாவெழுப்புகின்றது.[36]

இத்தகைய எல்லைகள் மற்றும் புறமொதுக்கல்களை, கொழும்பு மாநகர சபைப் பிரதேசம் நாட்டிலேயே அதிக இனத்துவக் கலப்புள்ள இடமென்பதை வைத்து நோக்குவதும் தீர்மானகரமானதாகும். மேலும், பாதிப்புற்ற மக்கள் தொகையில்

---

[34] *"அழகியல்மூலம் ஆட்சி: டெல்லியில் உலகத் தரத்திலான நகரை அமைத்தல்"*> D.A. Ghertner, in Ananya Roy and Aihwa Ong (ed.), மற்றும் Worlding Cities: ஆசியப் பரிசோதனைகளும், உலகமயம் என்னும் தன்மையின் கலையும், Blackwell 2011 என்பவற்றைப் பார்க்கவும்.

[35] *"ஆதிக்க வாதத்தைப் பலப்படுத்துதல்: யுத்தத்துக்குப் பின்னரான கொழும்பில் நகர்ப்புற நிலைமாற்றத்தின் அரசியல்"* பொருளியல் மற்றும் அரசியல் வாராந்த சஞ்சிகை, பாகம் xlvlil இல. 34ஐப் பார்க்கவும். இது அழகியல்படுத்தலுக்கும், அதிகரிக்கும் ஒழுக்கநிலை மற்றும் கண்காணிப்புக்கும் இடையிலான தொடர்பைப் பகுப்பாய்வுசெய்ய உதவும்.

[36] 'பொது இடங்களும், வாழ்க்கையின் தரமும்: கல்கிசை கடற்கரை சம்பந்தமான ஒரு விடய ஆய்வு" Debra Efroymson and Udan Fernando, July 2013, பக். 51ஐப் பார்க்கவும்.

கணிசமான பிரிவினர் தமிழர்களும், முஸ்லிம்களுமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த ஜனசமூகங்களின் பாரிய பிரிவினர் அரசியல் எதிர்க்கட்சிகளோடு இணைந்திருப்பதை வைத்து நோக்கும்போது, பலவந்த வெளியேற்றங்களின் பின்னால் சாத்தியமான அரசியல் நோக்கங்கள் உள்ளனவா என்றும் வினாக்கள் எழுப்பப்பட்டுள்ளன.[37]

## உலக வங்கியின் பாத்திரம்

இறுதியாக, வெளிநாட்டு மூலதனத்தின் பாத்திரத்துக்கு மேலதிகமாக, சர்வதேச நிதி நிறுவனங்களின், விசேடமாக உலக வங்கியின் (WB) பாத்திரத்தை நோக்குவது முக்கியமானதாகும். இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தி மற்றும் பொருளாதாரக் கொள்கைகளுக்கான அதன் ஆதரவு நாட்டின் பொருளாதாரப் புவியியலை[38] மீள் வடிவமைப்பதில் வங்கியின் எதிர்பார்ப்புகளில், விசேடமாக மஹிந்த சிந்தனையில் எதிரொலிக்கும் போட்டிமிக்க நகர்ப்புறப் புவியியல்[39] அம்சங்களை உருவாக்குவதில் தங்கியுள்ளது. அபிவிருத்தியில் பிராந்திய அசமத்துவநிலைகள் மற்றும் யுத்தத்துக்கான வரலாற்றுக் காரணங்கள் மற்றும் அதன் பின்விளைவுகளுக்குக் கவனம் செலுத்தத் தவறுதல் உள்ளிட்டவகையில் பல்வேறு காரணங்களுக்காக உலக வங்கி ஆதரிக்கும் அணுகுமுறையை விமர்சிக்கும் அதேவேளையில், இந்த அறிக்கைக்கு இயைபுள்ள விடயம் "ஆழமடையும் ஜனநாயகத்தில் சந்தை 'வினைத்திறன்'குறித்த உலக வங்கியின் வலியுறுத்தலாகும்."[40] நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கான அதன் நிலைமாறாத ஆதரவு இதை வெளிப்படையாகக் காட்டுவதாகும். மக்களின் பங்கேற்பை வலுப்படுத்துதல், உள்ளூரில் ஜனநாயகம் மற்றும் வகைப்பொறுப்புகுறித்த உலக வங்கியின் ஆரவாரப் பகட்டுரைகள் எவ்வாறிருப்பினும், உலக வங்கி UDAயின் மெட்ரோ கொழும்பு நகர்ப்புற அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு 213 மில்லியன் US $களைக் கடனாக வழங்கியுள்ளது (MCUDP).[41] இது UDAயின் கண்காணிப்பில் இராணுவமயப்படுத்தலுக்கும், உள்ளூரில் ஜனநாயகச் சீரழிவுக்கும் உட்கிடையாக ஒப்புதல் வழங்குவதாகும்.

MCUDPக்கு மேலதிகமாக உலக வங்கி UDA அனுசரணையின்கீழான உத்தி நகரங்கள் அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு (SCDP) காலி மற்றும் கண்டி நகரங்களில்

---

[37] திஸ்ஸாரணி குணசேகர, "த சன்டே லீடர், Rajapaksas' Operation Colombo" 26 Sept. 2010ஐப் பார்க்கவும்.

[38] இலங்கை: பொருளாதாரப் புவியியலை மீள்வடிவமைத்தல், உலக வங்கி, 2010.

[39] UN-Habitat உடன் இணைந்து தயாரிக்கப்பட்ட 2010 ஆய்வறிக்கை, "இலங்கையின் நகர்ப்புற இலட்சியத்தை கொள்கை மற்றும் நடவடிக்கையாக மாற்றுதல்" இதனை மேலும் எதிரொலித்து, விரிவாக்கம் செய்கின்றது.

[40] ஒரு சுருக்கமான விமர்சனத்துக்கு The Island, "நகர்ப்புற அபிவிருத்தி: உலக வங்கி வழிகாட்டும் இடங்களுக்கு இலங்கை பின்தொடருகின்றது" – பொருளாதார ஜனநாயகத்துக்கான கூட்டமைப்பு, 23 ஜுன் 2013, கட்டுரையைப் பார்க்கவும்.

[41] MCUDP நகரத்தில் வெள்ளக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் நடை வசதியை மேம்படுத்துதல் குறித்துக் கவனஞ்செலுத்துகின்றது. இது மக்களின் தன்விருப்பற்ற மீள்குடியேற்றங்களை அதிகுறைவாக்குகின்றது.

அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்கு 147 மில்லியன் US $களைக் கடனாக வழங்கியுள்ளது.[42] கொழும்பில் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்படும் நிலைக்கு நேரெதிராக, இந்தக் கருத்திட்டங்களால் பாதிப்புறும் மக்களுக்கு தன்விருப்பற்ற மீள்குடியேற்றம் சம்பந்தமான உலக வங்கி வழிகாட்டல்கள், விஸ்தாரமான மீள் குடியேற்றச் செயல்திட்டங்கள் (RAP) மற்றும் விரிவான சமூக-பொருளாதார ஆய்வுகளினடிப்படையிலான உரித்துச் சட்டகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.[43]

ஒருபுறத்தில் UDA பாரிய அளவிலான மீள்குடியேற்றங்கள் சம்பந்தப்பட்ட கொழும்பின் நகர்ப்புறப் புத்தாக்கத்தின் ஆக்கக்கூறுகளுக்கு உலக வங்கி (WB) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) போன்ற கடன் வழங்குநர்களிடமிருந்து நிதியளிப்பை நாடுவதாகத் தெரியவில்லை. இது உதாரணமாக ADB நிதியளிப்புடன் இடம்பெற்ற தெற்கின் அதிவேக வீதி மற்றும் காலி மற்றும் கண்டி நகரங்களில் இடம்பெற்ற உலக வங்கி நிதியளிப்புடன்கூடிய கருத்திட்டங்களுடன் இணைப்புற்றதாக வரும் கடப்பாடுகளைப் பிரயோகிக்கப் பலவந்தப்படுத்தப்படுவதைத் தவிர்க்கும் நோக்கத்திலாகும். மறுபுறத்தில் UDA அபிவிருத்தியென்ற பெயரில் ஆயிரக் கணக்கானவர்களைப் பலவந்தமாக வெளியேற்றுவதை வேண்டுமென்றே காணாததைப் போலப் பாவனை செய்துகொண்டு உலக வங்கி UDA க்குத் தொடர்ந்தும் நிதியளிப்பை வழங்குகின்றது. இது நாட்டில் இரு வகைப்பிரிவினரான குடிமக்கள் உருவாகுவதற்கு வழிசமைத்துள்ளது. ஒரு பிரிவினர் சில சர்வதேசத் தரநியமங்களுக்கமைவான உரித்துரிமைகள் மற்றும் பாதுகாப்புக்குத் தகுதியுள்ளவர்கள்; இன்னுமொரு பிரிவினர் அனைத்துமடங்கும் உரித்துரிமைகள் சட்டகமோ, UDA மற்றும் இராணுவத்தின் கட்டுப்பாடு மற்றும் தர்ம உதவிகளின்கீழ் பலவந்தமாக வெளியேற்றத்துக்குள்ளாகும் இலகுவில் பாதிப்புறும் மக்களாவர்.

இப்பலவந்த வெளியேற்றங்கள் கொழும்பு நகர்ப்புற அபிவிருத்தியின் உலக வங்கி நிதியளிப்பு ஆக்கக்கூறின் ஒரு பகுதியாக இடம்பெறவில்லையென்று தெரிவிப்பது ஒரு கண்துடைப்பு நாடகமாகும். உலக வங்கி ஆதரவுடன் இடம்பெறும் MCUDP கொழும்பின் 'மீளபிவிருத்தியினதும்', பலவந்த வெளியேற்றங்களினதும் ஒரு பகுதியென்பதோடல்லாமல், அவையிரண்டும் UDA என்ற ஒரே முகவர் நிலையத்தினாலேயே செயற்படுத்தப்படுகின்றன. ஆகவே இந்த இராணுவ ஏற்பாட்டில் இடம்பெறும் பலவந்த வெளியேற்றங்களுக்கு உலக வங்கி நேரடியாக நிதியளிப்புச் செய்யாவிடினும், அது நகர்ப்புற அபிவிருத்திக்கான பரந்த கொள்கை வழிகாட்டலை வழங்குவதனாலும், ஏனைய முனைகளில் அது UDAயின் மீளபிவிருத்தி முயற்சிகளுக்குத் துடிப்பாக நிதியளிப்புச் செய்வதாலும் உலக வங்கியும் இந்த

42 பார்க்கவும் - கருத்திட்டத் தகவல் ஆவணம் (PID), மதிப்பாய்வுப் படிநிலை, அறிக்கை இல. PIDA 2513, உலக வங்கி, இலங்கை

43 http://documents.worldbank.org/curated/en/docsearch/report/RP1580, 31 மார்ச் 2014இல் பார்க்கலாம். முறையியல்கள் மற்றும் தேடல் முடிவுகளில் அவை பரிபூரணமானவையென்று கூறப்படாவிடினும், இத்தகைய ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன மற்றும் இந்த அறிக்கைகள் பொது அரங்கில் உள்ளன என்னும் நிகழ்வுண்மைகள் முக்கியமானவையாகும்.

விடயத்தில் உடந்தையாகவே உள்ளது. இவ்வாறாகக் கொழும்பில் இடம்பெறும் பலவந்த வெளியேற்றங்களும், உண்மையில் இலங்கையின் ஏனைய நகரங்கள், பட்டினங்களில் வரவிருக்கும் பலவந்த வெளியேற்றங்களும் சர்வதேச அபிவிருத்திக் கடன் வழங்கலின் அரசியல் பொருளாதாரத்தில் உள்ளமைவானவையாகும். இங்கு கடன் வழங்குபவர்கள், அவர்கள் ஆதரவு வழங்கும் கருத்திட்டங்களும், முகவர் நிலையங்களும் அபிவிருத்தியின் பெயரில் ஜனநாயக விரோத, நீதிமுறை சாராத - அல்லது அநீதியான - நீதிசார்ந்த, இராணுவமயப்படுத்தப்பட்ட, சந்தைச் சார்பு ஆட்சிமுறையை வலுப்படுத்துகையில், தமது கைகள் சுத்தமானவையென்று கூறிக்கொள்ளலாம்.

## முடிவுரை

பாதுகாப்பு மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சு தெரிவிப்பதன் பிரகாரம் ''கொழும்பு உப-நகர்ப் பகுதிகளில் சேவைகளைக் குறைவாகப் பெற்றுக்கொள்ளும் குடியேற்றங்களை வாழிட இடமாற்றம் செய்வதன் பொருளாதார மற்றும் சமூக அனுகூலங்கள் பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றன:

> ''ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரராகவிருக்கும் சட்ட உரிமையும், அந்தஸ்தும், மக்கள் மத்தியில் தொழில்முயற்சிகள் அபிவிருத்தியும், அங்கீகரிக்கப்பட்ட வேலைவாய்ப்புகளும்
>
> சமூக அங்கீகாரம், ஒரு நிரந்தர முகவரி, மேலும் சிறப்பான சமூகம், சட்டவிரோத நடவடிக்கைகள் இல்லாதொழிப்பு
>
> பிள்ளைகளுக்கு முறையான பெண் கல்வி மற்றும் இளைஞர் கல்விக்கான அணுகுவழிகள். பெண்களுக்கு மேலும் சிறப்பான திருமண வாய்ப்புகளுக்கான சமூக அங்கீகாரம்.''[44] (வடிவமும், மொழியும் மூல ஆவணத்திலுள்ளவாறு)

'சமூக அங்கீகாரம்', 'மேலும் சிறந்த ஒரு சமூகம்' மற்றும் 'சட்டவிரோத நடவடிக்கைகள் இல்லாதொழிக்கப்படுதல்' என்பவற்றிலான வலியுறுத்தல், குறைந்த வருமானம் பெறும் ஜனசமூகங்கள்குறித்து UDA கொண்டுள்ள அணுகுமுறையின் ஆழமான பாகுபாடு நிறைந்த கருத்தை எடுத்துக்காட்டுகின்றது. வாழிட இடமாற்றம் தன்னளவில் ஓர் உயர்வான சமூக அந்தஸ்தையும், மற்றும் ''பெண்களுக்கு மேலும் சிறந்த திருமண வாய்ப்புகளையும்'' வழங்கிவிடும் என்னும் கருத்து UDAயினதும், அரசாங்கக் கொள்கை இடையீடுகளினதும் ஆழமான வர்க்க மற்றும் தந்தைவழிப் பாகுபாடுகளை எதிரொலிப்பதாகவுள்ளது. மீளிடமாற்றம் 'இளைஞர்களின் கல்வியை' மேம்படுத்துமென்ற கோரிக்கை பெரிதும் பயனற்ற பகட்டாரவாரமான ஒன்றாகும். யதார்த்தத்தில் இதற்கெதிரான விடயமே உண்மையானதாகும். விசேடமாக, பிரபல

[44] கொழும்பு உபநகர்ப் பகுதிகளில் குறைவாகச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் குடியேற்றங்களை மீளிடமாற்றம் செய்யும் சாத்தியங்கள், பாதுகாப்பு அமைச்சு

பாடசாலைகள் அமைந்துள்ள இடங்களுக்கு அருகாமையில் வசிப்பதன் காரணமாகத் தமது பிள்ளைகளை அங்கு சேர்த்திருப்போர் இந்த அயலிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்படும்போது இதுவே நடைபெறுவதாகும். 'தொழில்முயற்சி அபிவிருத்தி' விடயத்திலும் இதுவே உண்மையாகும். விசேடமாக உயர்ந்த கோபுர வீடுகளுக்குச் செல்வோர் பலரின் வாழ்வாதாரங்களில் இது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். இந்த விவகாரங்கள் இந்த அறிக்கையின் பாகம் IIஇல் விபரமாக ஆராயப்படுகின்றன.

நகர்ப்புறப் புனரமைப்புக் கருத்திட்டத்தின்கீழ் ஒரு வீட்டுக்கான சட்டபூர்வ உரிமை கிடைப்பது ஏனைய சட்டத்தில் நிலைநாட்டப்பட்ட நியதிச்சட்ட மற்றும் வழமை உரிமைகளைத் தியாகம் செய்வதன்மூலம் மாத்திரமேயாகும். கணிசமான பொருளாதார ஆகுசெலவுகளையும் செலுத்தவேண்டும். முன்பே வாதிட்டதுபோன்று, மேலும் விபரமாகக் கீழே கலந்துரையாடுவதுபோன்று, சட்டத்தின் முறையான செயல்முறை இல்லாதிருப்பதும், உரித்துரிமைகள்குறித்த பயனுறுதிமிக்க சட்டகமொன்று இல்லாதிருப்பதும் உரிமைகள் சீரழியும் இடர்வரவை அதிகரிக்கின்றன. இச்செயல்முறையில் இறுக்கமான சட்டத்தன்மைகுறித்துப் பேசப்படுவது சட்டத்தின் ஆட்சியையன்றி, சட்டத்தினால் ஆட்சியென்னும் செல்நெறியையே வலியுறுத்துகின்றது. இது மேலும் குறிப்பான ஒரு கரிசனை விடயத்தை எடுத்துக்காட்டுகின்றது. அதாவது பயனுறுதியுள்ள சட்ட நிவாரணங்களுக்கான அணுகுவழி இல்லாமற்போவதாகும். பிரதம நீதியரசரின் அரசியல் குற்றச்சாட்டு, சட்ட மாஅதிபர் பதவியிலிருந்துகொண்டு UDA க்குச் சட்ட மதியுரை வழங்கியவரைப் பிரதம நீதியரசராக நியமித்தமை சம்பந்தமான பீதிகள் பலவந்த வெளியேற்றங்கள் உள்ளிட்டவகையில் அடிப்படை உரிமை மீறல் வழக்குகளில் நிவாரணங்களை வழங்குவதில் உயர் நீதிமன்றத்தின் கையாலாகாத் தன்மையில் போய் முடிந்துள்ளதை விடயங்கள் ஏற்கெனவே எடுத்துக்காட்டியுள்ளன. உயர் நீதிமன்றம் செவிமடுத்த ஒரு வழக்கில் அது மக்களின் உரிமைகளுக்கு எவ்வித மதிப்புமின்றி, அரசாங்கத்தினதும், UDA யினதும் அணுகுமுறையை நியாயப்படுத்தியுள்ளது.[45] இச்சந்தர்ப்பத்தில் பிரதம நீதியரசர், "கொழும்பில் தொடரும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை யாருமே தடைசெய்யக்கூடாது" என்று தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.[46] இந்தக் கொள்கை, சட்ட மற்றும் அரசியல் சூழமைவிலேயே கொழும்பில் தொடரும் மற்றும் தொடரவிருக்கும் பலவந்த வெளியேற்றங்களும், அவற்றின் தாக்கங்களும் விபரமாக ஆராயப்படுதல் வேண்டும்.

---

[45] Colombo Telegraph, "பாதுகாப்பு அமைச்சு உயர் நீதிமன்றத்தை விமர்சிக்கின்றது: உயர் நீதிமன்றத்தின் அங்கீகாரத்துடன் இடம்பெயர்ந்த மக்களை ஏமாற்றுகின்றது" 25 நவம்பர் 2013

[46] World Socialist Website, "இலங்கையின் பிரதம நீதியரசர் கொழும்பில் பலவந்த வெளியேற்றங்களுக்கு ஆதரவு". 05 அக்டோபர் 2013

## பகுதி II: கொழும்பில் பலவந்த வெளியேற்றங்களின் அனுபவம் - பாதுகாப்புகள் குடைசாய்க்கப்படுவதும், உரிமைகள் சீரழிப்பும்

அபிவிருத்தி அடிப்படையிலான பலவந்த வெளியேற்றங்கள் சம்பந்தமான ஐ.நா. அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களிலிருந்து கூறுவதாயின், பலவந்த வெளியேற்றங்கள், "தனிநபர்கள், குழுக்கள் மற்றும் ஜனசமூகங்களை வீடுகளிலிருந்து மற்றும்/அல்லது காணிகளிலிருந்து, அல்லது அவர்கள் வாழ்ந்த அல்லது தங்கியிருந்த பொதுச்சொத்து மூலவளங்களிலிருந்து பலவந்தமாக அல்லது தன்விருப்பற்றவகையில் இடம்பெயரச்செய்யும் செயல் மற்றும்/அல்லது செயலின்மையோடு இணைப்புற்ற விடயங்களாகும். இவ்வாறாக இது தனிநபரின், குழுவின் அல்லது ஜனசமூகத்தினது ஒரு குறிப்பிட்ட வீட்டில், வதிவிடத்தில் அல்லது இட அமைவில் வாழும் அல்லது பணியாற்றும் ஆற்றலை இல்லாதொழிக்கும் அல்லது மட்டுப்படுத்தும் நடவடிக்கையென்பதோடு, அவர்களுக்குப் பொருத்தமான வடிவங்களிலான சட்ட அல்லது ஏனைய பாதுகாப்பை வழங்காமல்விடுதலுமாகும்."[47] (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டுள்ளது)

இதற்குப் பின்னர் இடம்பெறும் கலந்துரையாடல் கொழும்பில் வெளியேற்றங்கள் எவ்வாறு a) திணிப்பானது மற்றும் தன்விருப்பற்றது; b) குடிமக்கள் நகரத்தில் ஒரு குறிப்பிட்ட வீடுகளிலோ, இட அமைவுகளிலோ வசிக்கும் ஆற்றலை இல்லாதொழிக்கும் வகையில் அல்லது மட்டுப்படுத்தும்வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் c) மக்கள் பயனுறுதியுள்ள நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதையும், பொருத்தமான வடிவங்களிலான சட்ட மற்றும் ஏனைய பாதுகாப்புக்களைப் பயனுறுதியுள்ளவகையில் பெற்றுக்கொள்வதைத் தடுக்கும்வகையில் செயற்படுத்தப்படுகின்றன என்பதையும் எடுத்துக்காட்டுவதாகும். கொழும்புப் பிரதேசத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட மூன்று ஜனசமூகங்கள்குறித்த சுருக்கமான விடய ஆய்வின் அடிப்படையிலும், அல்லது ஏற்கெனவே வெளியேற்றப்பட்ட அல்லது வெளியேற்றப் படவுள்ள ஜனசமூகங்களைச் சேர்ந்த வதிவாளர்களுடன் இடம்பெற்ற நேர்முகங்களின் அடிப்படையிலும் அறிக்கையின் இப்பிரிவு நகரத்தில் பலவந்த வெளியேற்றங்களிலுள்ள பாரதூரமான உரிமை மீறல்களினதும், உரிய செயல்முறை மீறல்களினதும் வீச்சைச் சுட்டிக் காண்பிக்கின்றது.

உள்நாட்டுச் சட்டம் மற்றும் கொள்கைச் சட்டகத்தில் காணப்படும் கணிசமான பலவீனங்கள் பலவந்த வெளியேற்றங்களுக்கு உதவுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டுவது முக்கியமானதாகும். இவை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கத் தவறும் அநீதியான சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் மாத்திரமன்றி, பலவந்த

---

[47] மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகம், <u>அபிவிருத்தி அடிப்படையிலான பலவந்த வெளியேற்றங்கள் மற்றும் இடம்பெயர்வுகள்குறித்த அடிப்படைக் கோட்பாடுகளும், வழிகாட்டல்களும்</u>

வெளியேற்றங்களை ஓரளவேனும் தடுத்துநிறுத்தும் மற்றும் பாதிப்புற்றோருக்கு நிவாரணங்கள், நட்ட ஈடுகளை வழங்கவேண்டுமென்று தெரிவிக்கும் உள்நாட்டுச் சட்டங்களின் அம்சங்களை UDA வேண்டுமென்றே உதாசீனம்செய்ய வழிவகுக்கும் சட்டத்தில் காணப்படும் இடைவெளிகளுமாகும். ஆகவே, உரிமைகள் மற்றும் உரிய செயல்முறைகளின் மீறல்களின் தன்மையையும், அளவையும் தற்போதுள்ள வலுவளிக்கும், முன்னேற்றகரமான தேசியத் தரநியமங்கள் மற்றும் பாதுகாப்பேற்பாடுகள் சூழமைவிலும், பலவந்த வெளியேற்றங்களுக்கும் மற்றும் அத்தோடிணைந்த மனித உரிமை மீறல்களுக்குமெதிராகப் பாதுகாப்பு வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட, சர்வதேச அங்கீகாரம்பெற்ற தரநியமங்கள் சூழமைவிலும் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

## அபிவிருத்தி அடிப்படையிலான பலவந்த வெளியேற்றங்கள் மற்றும் தன்விருப்பற்ற மீள்குடியேற்றங்கள் சம்பந்தமான உள்நாட்டு மற்றும் சர்வதேசத் தரநியமங்கள்: ஒரு சுருக்கமான பொதுப்பார்வை

2001இல் இலங்கை தன்விருப்பற்ற மீள்குடியேற்றங்கள் சம்பந்தமான தேசியக் கொள்கையை (NIRP) ஏற்றுக்கொண்டது. அது தனது அறிமுக வாசகத்தில் (‘பகுத்தறிவுக் காரணம்’) குறிப்பிடுவதுபோன்று, இதற்கான காரணம் இலங்கையில் காணிச் சுவீகரிப்புக்கான பிரதான சட்டச் சட்டகமான 1950ஆம் ஆண்டின் காணிச் சுவீகரிப்புச் சட்டம் “காணி, கட்டிடங்கள் மற்றும் பயிர்களுக்கு மாத்திரம் நட்ட ஈடு வழங்கும் ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதாகும். அது கருத்திட்டங்களை நிறைவேற்றும் முகவர் நிலையங்கள் (PEA) பின்வருவன போன்ற குறிப்பான மீள்குடியேற்றப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டுமென்று கோரவில்லை. (அ) மக்கள்மீது தாக்கம் செலுத்தும் அம்சங்களைத் தவிர்க்கும் அல்லது அதிகுறைவாக்கும் மாற்றுக் கருத்திட்ட விருப்புத்தெரிவுகளை ஆய்வுசெய்தல்; (ஆ) காணிக்கு உரித்துரிமையற்றவர்களுக்கு நட்டஈடு வழங்குதல்; (இ) மீள்குடியேற்ற விருப்புத்தெரிவுகள் சம்பந்தமாகப் பாதிப்புற்ற மக்களையும், அவர்கள் செல்லவுள்ள இடங்களைச் சேர்ந்த மக்களையும் கலந்தாலோசித்தல்; (ஈ) பாதிப்புற்ற மக்களினதும், அவர்கள் செல்லவுள்ள இடங்களைச் சேர்ந்த மக்களினதும் வெற்றிகரமான சமூக மற்றும் பொருளாதார ஒருங்கிணைப்பு; (உ) பாதிப்புற்ற மக்களின் பூரணமான சமூக மற்றும் பொருளாதாரப் புனர்வாழ்வு.”

இது சம்பந்தமாக NIRP வலியுறுத்தும் “கொள்கைக் கோட்பாடுகள்” பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றன:

- தன்விருப்பற்ற மீள்குடியேற்றங்களை இயன்ற அளவுக்குத் தவிர்க்கும் அல்லது குறைக்கும்வகையில், “கருத்திட்டத்துக்கான மாற்றுத்தெரிவுகளை அல்லது கருத்திட்டங்களினுள் மாற்றுத்தெரிவுகளை” மீளாய்வுசெய்தல்.

- பாதிப்புற்ற நபர்கள் ‘‘வாழிட இடமாற்ற இட அமைவுகளையும், வாழ்வாதார நட்ட ஈடுகளையும், அபிவிருத்தி விருப்புத்தெரிவுகளையும் தெரிவுசெய்வதில் பூரணமாகச் சம்பந்தமுறுதலை’’ உறுதிசெய்தல்.

- ‘‘காணிக்கு ஆவண உரித்துரிமை இல்லாத பாதிப்புற்ற நபர்கள் நியாயமான, நீதியானமுறையில் நடத்தப்படுதல்’’:

- ‘‘இலகுவில் பாதிப்புறக்கூடிய குழுக்கள் இனங்காணப்பட்டு, அவர்களின் வாழ்க்கைத் தரங்களைக் கணிசமான அளவுக்கு மேம்படுத்த உதவிகள் வழங்கப்படுதல்’’

*(NIRPயின் கொள்கைக் கோட்பாடுகள் சம்பந்தமான ஒரு பூரண விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்குப் பின்னிணைப்பு 1ஐப் பார்க்கவும்).*

NIRP சகல அபிவிருத்தி காரணமான காணிச் சுவீகரிப்பு அல்லது அரசு உடைமையை மீளப்பெற்றுக்கொள்ளுதல் நிகழ்வுகளுக்கும் பிரயோகமாவதோடு, ‘‘20 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான குடும்பங்கள் பாதிக்கப்படுமாயின், ஓர் அனைத்துமடங்கும் மீள்குடியேற்றச் செயல்திட்டம் அவசியம்’’ என்றும் குறித்துரைக்கின்றது. மேலும் இக்கொள்கை ‘‘நிதியளிப்பு மூலம் எதுவாகவிருப்பினும் சகல கருத்திட்டங்களுக்கும் பொருந்துவதாகும்.’’ எவ்வாறாயினும், UDA கொழும்பில் இடம்பெறும் பலவந்த வெளியேற்றங்களுக்கு, தன்விருப்பற்ற மீள்குடியேற்றம் சம்பந்தமான தேசியக் கொள்கையை (NIRP) பிரயோகிப்பதில்லை. NIRPயில் உருவரைக்குறிப்பாக எடுத்துரைக்கப்பட்ட கொள்கைக் கோட்பாடுகளுக்கு மதிப்பளிக்கும்வகையில் அனைத்துமடங்கும் செயல்திட்டங்கள் எதுவும் தயாரிக்கப்படவுமில்லை, நடவடிக்கைகள் எடுக்கப்படவுமில்லை.

அபிவிருத்தி சம்பந்தமான தன்விருப்பற்ற மீள்குடியேற்றம் தொடர்பில் கணிசமான அளவிலான சர்வதேசத் தரநியமங்கள் தொகுதியொன்று இருப்பதைக் கவனிப்பது முக்கியமானதாகும். அபிவிருத்தி அடிப்படையிலான பலவந்த வெளியேற்றங்கள் மற்றும் இடம்பெயர்வுகள்குறித்த ஐ.நா. அடிப்படைக் கோட்பாடுகளும், வழிகாட்டல்களும் (ஐ.நா. வழிகாட்டல்கள்) மிக முக்கியமானவையாக விளங்குவதோடு, வெளியேற்றத்துக்கு முன்னரும், வெளியேற்றத்தின்போதும், அதற்குப் பின்னரும் பாதிப்புறும் நபர்களுக்கு ஒரு வீச்சான பொருண்மை மற்றும் நடவடிக்கைமுறைக் காப்பேற்பாடுகளையும், பாதுகாப்புகளையும் வழங்குவதோடு, இது விடயத்தில் குறிப்பாக அரசின்மீது பல கடப்பாடுகளை விதிக்கின்றது.

ஐ.நா. வழிகாட்டல்கள் அரசுகள் ‘‘பலவந்த வெளியேற்றங்கள் புறநடையான சூழ்நிலைகளிலேயே இடம்பெறுவதை உறுதிப்படுத்தவேண்டும். பலவந்த வெளியேற்றங்கள் ஒரு வீச்சான சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள்மீது தாக்கம் செலுத்துவதால் அவற்றுக்குப் பூரணமான நியாயவிளக்கம் அவசியமாகும்’’ என எடுத்துரைக்கின்றன (இல. 21). இந்த நடவடிக்கைமுறை நிபந்தனைத் தேவைகள் வழங்கும் பாதுகாப்பு, ‘‘உள்நாட்டுச் சட்டத்தின்கீழ், இலகுவில்

பாதிப்புறக்கூடிய சகல நபர்களும், பாதிப்புறும் குழுக்களும் வீட்டுக்கும், சொத்துக்குமான உரித்துரிமைகளைக் கொண்டிருந்தாலும்சரி, அவ்வாறில்லாவிட்டாலும் சரி, பொருந்துவதாகும;'' என்று எடுத்துரைக்கும் ஐ.நா. வழிகாட்டல்களின் குறித்துரைப்பு பிரத்தியேகமாக இயைபுள்ளதாகும்'' (இல. 21).

ஐ.நா. வழிகாட்டல்களின் பிரகாரம், ''நகர்ப்புற மற்றும் கிராமியத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திச் செயல்முறைகள் பாதிப்புறக்கூடிய சகலரையும் ஈடுபடுத்துவதோடு, பின்வரும் விடயங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்'':

- பாதிப்புறக்கூடிய சகல நபர்களுக்கும் உத்தேசத் திட்டங்கள் மற்றும் மாற்றுத் தெரிவுகள் சம்பந்தமான பகிரங்க அமர்வுகள் உள்ளிட்டவகையிலான முறையான அறிவித்தல்;
- முன்கூட்டியே இயைபுள்ள தகவல்களைப் பயனுறுதியுள்ளவகையில் பரவலாக வழங்குதல். இது காணிப் பதிவேடுகளையும், இலகுவில் பாதிப்புறக்கூடிய குழுக்களைக் குறித்துரைப்பாகப் பாதுகாக்கக்கூடிய முயற்சிகளை உள்ளடக்கியவகையில், உத்தேச அனைத்துமடங்கும் மீள்குடியேற்றத் திட்டங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்;
- உத்தேசத் திட்டம் சம்பந்தமான பொதுமக்கள் மீளாய்வு, கருத்துரை மற்றும்/ அல்லது அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான ஒரு நியாயமான காலப்பகுதி;
- பாதிப்புறும் நபர்களின் உரிமைகள் மற்றும் விருப்புத்தெரிவுகள் சம்பந்தமாகச் சட்ட, தொழில்நுட்ப மற்றும் ஏனைய மதியுரைகளை வழங்குதல்;
- பாதிப்புறும் நபர்கள் மற்றும் அவர்களின் பரப்புரையாளர்களுக்கு வெளியேற்ற முடிவுக்குச் சவால்விடும் மற்றும்/அல்லது மாற்றுப் பிரேரணைகளைச் சமர்ப்பிக்கும் மற்றும் தமது கோரிக்கைகள் மற்றும் அபிவிருத்தி முன்னுரிமைகளைத் தெளிவாக எடுத்துரைக்கும்வகையில் சந்தர்ப்பங்கள் வழங்கப்படும் பகிரங்க அமர்வுகளை நடத்துதல்.

இக்குறித்துரைப்புகளில் பல NIRPயிலும் காணப்படுவதோடு, கொழும்பில் பலவந்த வெளியேற்றங்கள் விடயத்தில் அனையனைத்துமே உதாசீனம் செய்யப்பட்டுள்ளன. பலவந்தமாக வெளியேற்றப்படும் அனைவருக்கும் UDA நட்டஈடு வழங்க மறுத்துள்ள அதேவேளையில், ஐ.நா. வழிகாட்டல் (இல. 61), ''பலவந்தமாக வெளியேற்றப்படும் அனைவரும், அவர்கள் தமது சொத்துகளுக்கு உரித்துரிமை கொண்டிருந்தாலும்சரி, அவ்வாறில்லாவிட்டாலும்சரி, இச்செயல்முறையில் அவர்கள் ஆரம்பத்தில் வசித்த வீடுகளுக்கும், இழந்த காணிக்கும், சேதமாக்கப்பட்ட சொத்துகளுக்கும் நட்டஈடு பெறுவதற்கு உரித்துள்ளவர்களாவர் என்பதோடு, பாதிப்புற்ற சொத்துகளை எடுத்துக் கொள்வதற்கும், அவற்றை இடமாற்றம் செய்வதற்குமான உதவிகளைப் பெற்றுக் கொள்ளவும் உரித்துள்ளவர்களாவர்'' என்று தெளிவாகவே வலியுறுத்தியுள்ளது. மேலும், ஐ.நா. வழிகாட்டல்கள் (இல. 63) உதாரணமாக காணித்துண்டுகள், வீட்டுக் கட்டமைப்புகள், பொருட்கள், இழப்புகள் மற்றும் ஆகுசெலவுகள்; ஈடுகள் அல்லது ஏனைய கடன் தண்ட விதிப்புகள்; இடைக்கால அல்லது மாற்று வீடமைப்பு;

அதிகாரித்துவ மற்றும் சட்டக் கட்டணங்கள்; இழந்த சம்பளங்கள், வருமானங்கள், வியாபாரத்தொழில் இழப்புகள்; இழந்த கல்வி வாய்ப்புகள்; சுகாதார மற்றும் மருத்துவக் கவனப்பராமரிப்பு; மீள்குடியேற்ற மற்றும் போக்குவரத்து ஆகுசெலவுகள் (விசேடமாக வாழ்வாதார மூலத்திலிருந்து தொலைவிடங்களுக்கான வாழிட இடமாற்றத்தின் போதானவை) போன்ற ''இழப்புகளையும், மற்றும் ஆகுசெலவுகளையும் பொருளாதாரச் சேதக் கணிப்பீடுகளின்போது கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்'' எனக் கூறுகின்றது.

தன்விருப்பற்ற மீள்குடியேற்றம் சம்பந்தமான உலக வங்கியின் செயற்பாட்டுக் கொள்கை **(OP)** 4.12கூட ''அவர்கள் குடியிருக்கும் காணிக்கு அங்கீகாரம்பெற்ற சட்ட உரிமையோ, உரிமைக்கோரிக்கையோ இல்லாதவர்கள் உள்ளிட்டவகையிலான 'பாதிப்புற்ற நபர்கள்' என அங்கீகரிக்கப்படும் சகலருக்கும் ''காணி தவிர ஏனைய சொத்துக்கள் இழப்புக்கான நட்டஈடு வழங்கப்படுதல் வேண்டும்'' என்று தெரிவிக்கின்றது. அத்துடன் OP-142 மீள்குடியேற்றத் திட்டம் அல்லது கொள்கைச் சட்டகம் இடம்பெயர்ந்த நபர்கள் பின்வரும் விடயங்களைப் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்யும் நடவடிக்கைகளை உள்ளடக்குதல் வேண்டுமென்றும் தெரிவிக்கின்றது:

(i) மீள்குடியேற்றம் சம்பந்தமான தமது உரிமைகள் மற்றும் விருப்புத்தெரிவுகள் எவையென்று அவர்களுக்குக் கூறப்படுதல்;

(ii) மீள்குடியேற்றம் சம்பந்தமாகக் கலந்தாலோசிக்கப்படுதல், விருப்புத்தெரிவுகள் வழங்கப்படுதல், தொழில்நுட்ப ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் சாத்தியமான மீள்குடியேற்ற மாற்றுத்தெரிவுகள் வழங்கப்படுதல்; மற்றும்

(iii) கருத்திட்டத்தோடு நேரடியாகத் தொடர்புற்ற சொத்து இழப்புகளுக்குப் பூரண பதிலீட்டு ஆகுசெலவில் உடனடியான, பயனுறுதியுள்ள நட்டஈடுகள் வழங்கப்படுதல்.

இறுதியாக, போதிய வீடமைப்பு உரிமைக்கான ஐ.நா. விசேட அறிக்கையாளரால், ''உள்நாட்டுச் சட்டங்களின்கீழ் அவர்கள் வீட்டுக்கு அல்லது சொத்துக்கான உரித்துரிமையைக் கொண்டிருப்பினுஞ்சரி, அவ்வாறில்லாவிட்டாலுஞ்சரி, இலகுவில் பாதிப்புறக்கூடிய சகல தனிநபர்களுக்கும், குழுக்களுக்கும் பலவந்த வெளியேற்றத்துக் கெதிரான பாதுகாப்பு செயற்படுதல் வேண்டும்''[48] என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ''நகர் அபிவிருத்திகுறித்த பொதுவான திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் பலவந்த வெளியேற்றங்களை நியாயப்படுத்தும்வகையில் ஒருபோதும் பயன்படுத்தப்படுதல் ஆகாது'' என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அறிக்கையாளர் அரசுகளின் கடப்பாடு ''வெளியேற்றங்கள் ஓர் இறுதி வழியாகவும், சர்வதேசத் தரநியமங்களுக்கு அமைவானவையாகவும் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவது மாத்திரமன்றி, அபிவிருத்திக் கருத்திட்டங்களால் மத மற்றும் இனத்துவ சிறுபான்மையினர் விகிதாசாரமற்ற முறையில் பாதிப்புறாதிருப்பதையும், வீடுகள் மற்றும் காணிகளை அரசு

[48] A/HRC/16/42Add.3 (SR Housing, 2011) ஐப் பார்க்கவும்.

சுவீகரிப்பதற்குச் சவால்விடுத்து, சட்ட நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் இருப்பதையும் உறுதிப்படுத்துவதாகும்"[49] என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தரநியமங்களையும், கொள்கைகளையும் வலியுறுத்துவது பலவந்த வெளியேற்றங்களும், தன்விருப்பற்ற மீள்குடியேற்றமும் பரந்த வீச்சிலான இடர்வரவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை அங்கீகரிப்பதாகும். உதாரணமாக, உலக வங்கி தனது அனுபவம் பின்வரும் விடயங்கள் இருப்பதை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கின்றது:

> "அபிவிருத்தித் திட்டங்களின்கீழான தன்விருப்பற்ற மீள்குடியேற்றங்கள், பாதிப்புத் தணிப்பு இடம்பெறாவிடில் அனேகமான சந்தர்ப்பங்களில் பாரதூரமான பொருளாதார, சமூக மற்றும் சூழல் இடர்வரவுகளை ஏற்படுத்துகின்றன; உற்பத்தி முறைமைகள் இணைப்புக் குலைக்கப்படுகின்றன; மக்கள் தமது உற்பத்திசெய்யும் சொத்துக்களை அல்லது வருமான மூலங்களை இழக்கும்போது வறுமைக்கு முகங்கொடுக்கின்றனர்; மக்கள் தமது உற்பத்தித் திறன்கள் குறைவாகப் பயன்படுவதும், மூலவளங்களுக்கான போட்டி அதிகமாகக் காணப்படுபவதுமான பிரதேசங்களுக்கு வாழிட இடமாற்றம் செய்யப்படுகின்றனர்; ஜனசமூக நிறுவனங்களும், சமூக வலையமைப்புகளும் பலவீனமடைகின்றன; இரத்த உறவுகள் பரவலாகச் சிதறுண்டு செல்லுகின்றனர்; கலாசாரம், பாரம்பரிய அதிகார வலு மற்றும் பரஸ்பர உதவிகளுக்கான சாத்தியவளம் குறைவடைகின்றது அல்லது முற்றாக இல்லாதுபோகின்றது."[50]

## நிகழ்வு ஆய்வுகளும், குறிப்பான கரிசனை விடயங்களும்

முறையான செயல்முறையின்மை, பயனுறுதியுள்ள நிவாரணங்களுக்கான அணுகுவழியின்மை, அரசியலமைப்பு ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகரிக்கப்பட்ட பல உரிமைகள் மீறப்படுதல் உள்ளிட்டவகையிலான கொழும்பில் இடம்பெறும் பலவந்த வெளியேற்றங்களிலிருந்து எழுந்துள்ள மனித உரிமை மீறல் கரிசனை விடயங்களின் வீச்சு மிவூஸ் வீதி வெளியேற்றங்களால் நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

மிவூஸ் வீதி விடய நிகழ்வு

2010 மே 08ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA) கொழும்பு-02, கொம்பனித்தெரு, மிவூஸ் வீதியிலிருந்த 38 குடும்பங்கள் வசித்துவந்த 20 வீடுகளை இடித்துத் தரைமட்டமாக்கியது. பாதிப்புற்ற குடும்பங்களின் சில அங்கத்தவர்கள் இடித்தழிப்புக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் வாய்மொழிமூலம் தமக்கு வீடுகளிலிருந்து வெளியேறுமாறு தகவல் வழங்கப்பட்டதென்றும், 3 தினங்களுக்கு முன்னர் அது எழுத்தில் வழங்கப்பட்டதாகவும் CPA க்குத் தெரிவித்தனர். அவர்கள் எவருமே தமக்கு மாற்று இருப்பிடங்களோ, நட்ட ஈடுகளோ அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கவில்லை.

[49] E/CN.4/2006/41/Add.2 (SR Housing, 2006) ஐப் பார்க்கவும்.

[50] உலக வங்கி, செயற்பாட்டுக் கைந்நூல், OP 4.12-தன்விருப்பற்ற மீள்குடியேற்றம்

இவ்வாறாக, புல்டோஸர்களுடனும், உதவிக்கு இராணுவத்தினருடனும் UDA அதிகாரிகள் வந்து சேர்ந்தபோது, அவர்கள் எதிர்த்துநின்றபோதிலும், எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

வதிவாளர்கள் ஏதிலிகளாக விடப்பட்டனர். அவர்களுக்குச் சொந்தமான பொருட்கள் அழிக்கப்பட்டிருந்தன. அவர்கள் உறவினர்களுடன் அல்லது வேறிடங்களில் மாற்று இருப்பிடங்களைத் தேடிக்கொள்ளும்வரையில் 3 – 4 தினங்களுக்கு கொம்பனித்தெரு மஸ்ஜித் சம்மேளனத்தின் பள்ளிவாசலில் தங்கவைத்து, உணவளிக்கப்பட்டனர். பின்னர் UDA தெமட்டகொடையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மீள்குடியேற்ற இடத்தில் அவர்களுக்கு நிரந்தரத் தொடர்மாடி வீடுகள் வழங்கப்படும்வரையில் ஆண்டொன்றுக்கு மாற்று இருப்பிட வசதிக்காக மாதாந்தம் 8000/- ரூபா வாடகைத் தொகை வழங்கப்படுமென்று அவர்களுக்கு அறிவித்தது. (இது மிவூஸ் வீதியிலிருந்து வட-மேற்காக 6 கி.மீ. தொலைவில் அமைந்திருப்பதாகும்.) இது ஒரு வருடத்தில் தயாராகிவிடுமென்றும் தெரிவித்தது.[51] அவர்களின் வீடுகள், உடைமைகள் மற்றும் வியாபாரத் தொழில்கள்குறித்த இழப்புகளுக்கு நட்ட ஈடுகள் எதுவும் அவர்களில் எவருக்கும் வழங்கப்படவில்லை. இரு கருத்துரையாளர்களுக்கு மெனிக் ஃபாம் வலயம்-1ஐ நினைவூட்டும் வகையிலான, ஓர் அறையுடன்கூடிய பலகைக் கொட்டில் வரிசைகள் அவர்களுக்குத் தற்காலிக மீள்குடியேற்றத் திட்டமாக வழங்கப்பட்டன.[52] ஆயினும் ஒரு வருட காலத்தினுள் தெமட்டகொடையில் அமைக்கப்படவுள்ள புதிய தொடர்மாடித் தொகுதியில் நிரந்தர வீடுகள் வழங்கப்படுமென்று வாக்குறுதி வழங்கப்பட்டது. இதன் பின்னர், அவர்கள் வேறிடங்களில் வசிப்பதற்கு உதவியாக வாடகைப் படியும் வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், எவருக்குமே இவற்றை அல்லது மீள்குடியேற்ற இடத்தில் எந்த நிபந்தனையுடன் தொடர்மாடி வீடுகள் வழங்கப்படுமென்பதை எழுத்தில் தெரிவிக்கும் வகையில் எதுவுமே வழங்கப்படவில்லை. அவர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு 1 வருடம் கழிந்தநிலையில், புதிய தொடர்மாடி வீடுகள் தயாராகவில்லை. UDA வாடகைப் படியை மாதம் 12,000/- – 15,000/- வரை அதிகரித்தது. அது ஒரு வருடத்துக்கான மொத்தத் தொகையாகக் கொடுக்கப்பட்டது. எவ்வாறாயினும், இரண்டாவது வருட முடிவில், தொடர்மாடி வீடுகள் இன்னமும் தயாராகாதநிலையில் அவை ஒரு சில மாதங்களில் வழங்கப்பட்டுவிடுமென்றும், ஆகவே வாடகைப் படி 3 – 4 மாதங்களுக்குரிய தொகையாக அடுத்தடுத்து வழங்கப்படுமென்றும் UDA தெரிவித்தது. இது மொத்தப் படிகளைப் பெற்றுக்கொள்வதில் தாமதங்களுக்கு இட்டுச்சென்றது. பாதிப்புற்ற வதிவாளர்கள் அதைப் பெறுவதற்குப் பல தடவைகள் UDAக்குச் செல்லவேண்டியிருந்தது.

---

51 சண்டே டைம்ஸ், ''மிவூஸ் வீதியிலிருந்து வெளியேற்றப்படுவோருக்கு UDA மாதம் 8,000/- ரூபா வழங்க விருப்பம்'' 16 மே 2010

52 நிகொலா பெரேரா மற்றும் சிவமோகன் சுமதி, இலங்கை:ஏழைகளை பலவந்தமாக வெளியேற்றி நகரத்தை பாதுகாத்தல், Himal South Asian, July 2010.

2010 ஜுன் 24ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு அனுமதி கிட்டியது. பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர்களுக்கு நிரந்தர மாற்று வீடுகள் வழங்கப்படுமென்று UDAயும், நீதிமன்றமும் உறுதியுரை வழங்கின.[53] எவ்வாறாயினும், ஜனாதிபதி தெமட்டகொடையில், தற்போது மிஹிந்து சென்புர என்று அழைக்கப்படும் மீள்குடியேற்றக் கட்டிடத்தொகுதியை 2013 நவம்பர் 18இல் விதிமுறையாகத் திறந்து வைத்தபோது 500 தொடர்மாடி வீடுகளில் ஒன்றுகூட மிவூஸ் வீதியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு ஒதுக்கியளிக்கப்படவில்லை. அவை கொழும்பு நகரில் வேறிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன. மூன்றரை வருடங்களுக்குப் பின்னர், பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர்களுக்கு மாற்று வீடுகள் வழங்கப்படாத நிலையில், உயர் நீதிமன்றம் UDAஐக் கண்டிக்க மறுத்ததோடு, நீதிமன்றம் முன்னர் வழங்கிய கட்டளையைச் செயற்படுத்தவும் மறுப்புத் தெரிவித்தது.[54]

இதன் விளைவாக, இந்த வருட ஆரம்பத்தில் நிரந்தர மாற்று வீடுகள் கிடைக்க வேண்டிய 17 மிவூஸ் வீதிக் குடும்பங்களுக்கு (மேலே உசாவல்களைப் பார்க்கவும்) தெமட்டகொடையில் வெளியேற்றப்பட்டவர்களுக்கு 40 தனி வீடுகள் அமைக்கப்படுமிடத்தில் புதிய வீடுகள் வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த ஜனசமூகத்தின் சில அங்கத்தினர்கள் புதிய இட அமைவு குறித்துத் தாம் திருப்தியடையவில்லையென்றும், அது பிரதான வீதியிலிருந்து உள்ளே வெகுதொலைவில் அமைந்திருப்பதாகவும், அது ஒரு சேரியின் நடுவில் அமைந்திருப்பதாகவும் தெரிவித்தனர். இதை எழுதும்வேளையில், அனேகமாக வெளியேற்றப்பட்டு 4 வருடங்கள் கழிந்தநிலையில், வாக்குறுதியளிக்கப்பட்ட நிரந்தர வீடுகள் இன்னமும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

இடித்தழிக்கப்பட்ட வீடுகள் சேரிகளென்று UDA தெரிவிப்பதற்கு நேரெதிரான வகையில், அங்கிருந்து வெளியேற்றப்பட்ட சிலர் அவை முறையான வீட்டுக் கட்டமைப்புகளென்றும், சில வீடுகள் இருமாடிக் கட்டிடங்களென்றும் CPA க்குத் தெரிவித்தனர். எவ்வாறாயினும், இச்செயல்முறையின் ஆரம்பத்திலிருந்தே UDA தம்மை அரசுக் காணிகளில் சகிக்கமுடியாத நிலைமைகளின்கீழ் வாழ்ந்த சட்டவிரோதக் குடியிருப்பாளர்களாகவே நடத்தியதாகத் தெரிவித்தனர்.

மீண்டும், UDA தெரிவிப்பதற்கு நேர்முரணாக, 2010இல் வெளியேற்றப்பட்ட மிவூஸ் வீதி வதிவாளர்கள் அரச காணிகளில் அத்துமீறிக் குடியிருந்தவர்கள் அல்ல. அவர்களிடம் காணி உரித்துரிமை ஆவணங்கள் இருந்தன. FKM அமைப்பினால் நடத்தப்பட்டு, CPAயுடன் பகிர்ந்துகொள்ளப்பட்ட அனைத்துமடங்கும் ஆவணத் தொகுப்புகளின் பிரகாரம் மிவூஸ் வீதி வதிவாளர்கள் அனைவருமே காணி உரித்துரிமைப்

53 எஸ்.எஸ். ஜனகனன், S.S.Janagan, Asian Tribune, "இலங்கை: நகர அபிவிருத்தி அதிகார சபை இடித்தழிக்கப்பட்ட வீடுகளுக்கு மாற்று வீடுகள் வழங்குகின்றனர்", 28 ஜனவரி 2011

54 Colombo Telegraph, "பாதுகாப்பு அமைச்சு உயர் நீதிமன்றத்தை விமர்சிக்கின்றது: உயர் நீதிமன்றத்தின் அங்கீகாரத்துடன் இடம்பெயர்ந்த மக்களை ஏமாற்றுகின்றது" 25 நவம்பர் 2013

பத்திரங்களைக் கொண்டிருந்தனர். இவற்றுள் 11 உரித்து மாற்ற உறுதிகள்,[55] 5 நன்கொடை உறுதிகள்[56] மற்றும் ஒரு கடைசி விருப்பாவண உறுதி[57] என்பவை அடங்கியிருந்தன.

*(தனியார் காணிகள் சுவீகரிப்பின்போது பின்பற்றவேண்டிய நடவடிக்கைமுறை சம்பந்தமான தகவலுக்குத் தயவுசெய்து பின்னிணைப்பு 2ஐப் பார்க்கவும்.)*

மிவூஸ் வீதி விடயநிகழ்வு UDA மற்றும் இலங்கை அரசாங்கம் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட ஜனசமூகங்களின் தொடர்ச்சியானதும், சேர்ந்து பெருகுவதுமான இழப்புகள் மற்றும் சேதங்கள் விடயத்தில் தன்னிச்சையாகவும், உதாசீனமாகவும் நடந்துகொள்வதை எடுத்துக்காட்டுகின்றது. மிவூஸ் வீதி வதிவிடங்கள் இடித்தழிக்கப்பட்ட பின்னர் UDA பேச்சாளர் ஒருவர் பின்வருமாறு கூறியதாக அறிக்கையிடப்பட்டது:

> *'' பல வகையான உறுதிகள் இருக்கின்றன. அவர்களிடம் முறையான காணி உறுதிகள் இருப்பின் அவற்றைச் சமர்ப்பிக்கலாம். இது அரசுக்குரிய காணியாகும். இவை அரச காணிகளில் அமைக்கப்பட்ட அதிகார அங்கீகாரமில்லாத வீடுகளாகும்.''* வதிவாளர்கள் நீதிமன்றத்துக்குப் போகும் *உரிமை உள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொண்டார். ஆயினும், அது வாழிட இடமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தைத் தடை செய்யமாட்டாதென்று வலியுறுத்திக் கூறினார். ''அவர்களுக்கு நீதிமன்றத்துக்குச் செல்லும் உரிமையுள்ளது. அது செயல்முறையின் வேகத்தைக் குறைக்க மாட்டாது. மாறாக அது வேகத்தை மேலும் அதிகரிக்கும்.*[58]

இக்கூற்றிலிருந்து தெளிவாகத் தெரிவது என்னவென்றால், UDAக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது அல்லது சவால் விடுவது சம்பந்தமாக நீதிமன்றத்துக்குச் செல்வது போன்ற சட்டரீதியான வழிகளைப் பயன்படுத்தும் எந்த முயற்சியும் தாமதங்கள், அல்லது மாற்று வீடமைப்பு வசதியை அல்லது ஏனைய அனுகூலங்களை வழங்க

---

[55] உரித்து மாற்ற உறுதியென்பது ஒரு சொத்தைச் சொந்தமாகக் கொண்டிருக்கும் ஒருவர் வேறொருவருக்கு அதை விற்கும்போது/உரித்து மாற்றும்போது தயாரிக்கும் ஓர் ஆவணமாகும். உறுதி விற்பவரினதும், வாங்குபவரினதும் பெயர்கள், முகவரிகள் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்களையும், விற்பவருக்கு உரித்து மாற்றப்பட்ட இதற்கு முந்திய உறுதியின் விபரங்கள், மற்றும் விற்பனை விலை என்பவற்றையும் அடக்கியதாகும். விற்பவரும், இரு சாட்சிகளும் உறுதியில் கையொப்பமிட வேண்டும். அதன் பின்னர் அது நொத்தாரிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, உரிய முத்திரைகள் இடப்படும்.

[56] ஒரு நன்கொடை உறுதி ஒரு நபரிடமிருந்து (நன்கொடையளிப்பவர்) வேறொரு நபருக்கு (நன்கொடை பெறுபவர்) சொத்தை உரித்து மாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இங்கு உரிய விலை எதுவும் கவனிக்கப்படுவதில்லை. மற்றும் கொடையைப் பெறுபவர்மீதான அன்பு மற்றும் தயாள உணர்வு என்பவை குறிப்பிடப்படுகின்றன. முன்பு குறிப்பிட்ட அதே விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. (கொடை தருபவர், கொடைபெறுபவர், சாட்சிகள் கையொப்பமிட்டு, நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தி, முத்திரை ஒட்டப்படுகின்றது.)

[57] இறுதி விருப்பாவணம் ஒரு நபர் (விருப்பாவண உறுதி முடிப்பவர்) தனது வாழ்நாளில் சம்பாதித்த சொத்து தனது மரணத்தின் பின்னர் எவ்வாறு பிரித்தளிக்கப்படவேண்டுமென்று தெரிவிக்கும்வகையில் இறுதிப் பிரதிக்கினையைச் செய்வதாகும். ஒருவர் இவ்வாறு விருப்பாவணத்தை எழுதினால், மரணத்தின் பின்னர் அது ஏனைய சட்டங்களையும்விட மேலோங்குவதாகும்.

[58] சண்டே டைம்ஸ், ''மிவூஸ் வீதியிலிருந்து வெளியேற்றப்படுவோருக்கு UDA மாதம் 8,000/- ரூபா வழங்க விருப்பம்'' 16 மே 2010

மறுத்தல் போன்ற பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு இட்டுச்செல்லலாம். அத்தோடு, மிவூஸ் வீதி மற்றும் ஜாவா லேன் விடய நிகழ்வுகள் (கீழே கலந்துரையாடப்படுகின்றது) உயர் நீதிமன்றம் UDAயின் கருத்துகளுக்குச் சார்பாகவிருப்பதை எடுத்துக் காண்பிக்கின்றது. இது பலவந்த வெளியேற்றங்கள்குறித்த இடர்வரவுகளை எதிர்நோக்குவோரின் எதிர்பார்ப்புகளை மேலும் சிதைப்பதாகவே உள்ளது.

## இராணுவமயப்படுத்தல்

கொழும்பில் காணிகள் சுவீகரிக்கப்பட்டு, மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்படும் செயல்முறை இரண்டு தீர்மானகரமான வழிகளில் யுத்தத்துக்குப் பிந்திய வடக்கு-கிழக்கில் பயன்படுத்தப்படும் வழிகளை ஒத்துள்ளன. முதலாவது இராணுவத்தின் துடிப்பான ஈடுபாடு, இரண்டாவது கீழே மேலும் விபரிக்கப்படும் சட்டத்தின் சூழ்ச்சிகரமான பயன்பாடு ஆகும்.

பாதிப்புற்ற பல ஜனசமூகங்களின் வதிவாளர்கள் UDA பதவியினரோடு பணியாற்றும் இராணுவ ஆளணியினரே தீர்மானங்களை மேற்கொண்டு, செயல்முறையை மேற்பார்வை செய்வதாக அறிக்கையிட்டுள்ளனர். இராணுவ ஆளணியினர் பலவந்த வெளியேற்றங்களோடு தொடர்புள்ள பல்வேறு பணிகளில் ஈடுபடுவதை CPA நேரடியாகக் கண்டுள்ளது. இராணுவத்தின் ஈடுபாடு குடிமக்கள் இச்செயல்முறை சம்பந்தமாகக் கேள்வியெழுப்பும் சாத்தியத்தைக் குறைக்கின்றது. CPA சென்று சந்தித்த பலவந்த வெளியேற்றல்களை எதிர்நோக்கும் ஜனசமூகங்கள் மத்தியில் ஆழமான பீதியுணர்வு நிலவுகின்றது. பழிவாங்கல்கள்குறித்த பீதி காரணமாக வெளியேற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்வகையில் தம்மை ஒழுங்கமைத்துக் கொள்ள முடியாதிருப்பதாகப் பல வதிவாளர்கள் CPAயிடம் தெரிவித்தனர். உதாரணமாக, கொம்பனித்தெருவின் ஏனைய பகுதிகளிலுள்ள வதிவாளர்கள் தாம் ஏதாவது எதிர்ப்புக் காட்டினால் மிவூஸ் வீதி வதிவாளர்களின் கதியே தமக்கும் ஏற்படுமென்று அஞ்சுவதாக CPAயிடம் தெரிவித்தனர். வதிவாளர்கள் உயர்ந்த மட்டங்களிலான கவனக் கண்காணிப்புகள் இடம்பெறுவதாகவும், ஜனசமூகம் சம்பந்தமாகக் கண்காணிப்பதற்கும், அறிக்கையிடுவதற்கும் தகவல் வழங்குவோர் உள்ளதாகவும் தெரிவித்தனர்.

வடக்கு–கிழக்கில் இடம்பெற்றதுபோலவே, இராணுவமும், அரசாங்கமும் ஒன்றிணைந்து பலவந்த வெளியேற்றங்கள் சம்பந்தமான ஊடக வெளிப்படுத்தல்களை மட்டுப்படுத்த முயற்சியெடுத்துள்ளனர். மிவூஸ் வீதி இடித்தழிப்புகள் சம்பந்தமாகக் குறிப்பிடுகையில் பலவந்த வெளியேற்றங்களை ஆவணப்படுத்தாமல் ஊடகங்கள் தடுக்கப்பட்டனவென்று 'சன்டே ரைம்ஸ்' அறிக்கையொன்று தெரிவித்தது. இந்த அறிக்கையின் பிரகாரம் UDA வீடுகளை இடித்தழித்த இடத்தில் பத்திரிகையாளர்கள் எடுத்த புகைப்படங்களை இராணுவ ஆளணியினர் நாசம் செய்தனர். மோசமான வார்த்தைகளில் ஏசும் பிரிகேடியர் ஒருவர் படங்களை அழிக்குமாறும், தொலைக்காட்சி ஊடகவியலாளர்களின்

'வீடியோ கசெற்'றுகளை அகற்றுமாறும் கட்டளையிட்டதை ஏனையோர் செவிமடுத்துள்ளனர்.[59] காசல் வீதியிலிருந்து வெளியேற்றப்பட்ட சில வதிவாளர்கள் தமது கதை மற்றும் மனக்குறைகள்குறித்த இரண்டு தொலைக்காட்சி அலைவரிசைகளின் ஒளிபரப்பைத் தாம் வரவேற்றதாகவும், இந்த அலைவரிசைகளின் பிரதிநிதிகள் தமக்கு இத்தகைய கதைகளை ஒளிபரப்பவேண்டாமென்று "அறிவுறுத்தல்" கிடைத்துள்ளதாகவும் இவர்களுக்குத் தெரிவித்தனர். அறிவார்ந்த பொதுமக்கள் விவாதங்கள், பலவந்த வெளியேற்றங்களைச் சுற்றியுள்ள யதார்த்தங்கள் குறித்த சுயாதீன ஊடக அறிக்கைகள் என்பவை இல்லாமை காரணமாக, பாதிப்புற்ற ஜனசமூகங்களினுள் நிலவும் பீதியுணர்வுச் சூழல் மேலும் அதிகரிக்கின்றது.

## சட்டத்தின் தெரிவுசெய்யப்பட்ட, நிலைமாற்றத்துடன்கூடிய பயன்பாடு

அரசாங்கம் யுத்தத்துக்குப் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரிதும் இராணுவத்தைப் பயன்படுத்துவதனூடாகப் பெற்றுக்கொண்ட தனியார் காணிகளின் நிகழ்நிலை உடைமையைச் சட்டபூர்வமாக்கும் முயற்சிகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றது.[60] கொழும்பில் காணிச் சுவீகரிப்புச் செயல்முறைகளுக்கு அடிப்படையாகவுள்ள சட்டத்தின் தெரிவுநிலை மற்றும் நிலையான தன்மையற்ற பயன்பாடு, இதேவிதமான சூழ்ச்சித் தந்திரங்கள் தொழிற்படக்கூடுமென்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றன. தனியார் சொத்துகளைச் சுவீகரிக்கவும், அரசுக் காணிகளை மீளப் பெறுவதற்கும் தெளிவான சட்ட நடவடிக்கைமுறைகள் இருக்கும்போது இந்த நடவடிக்கைமுறைகள் கொழும்பில் பின்பற்றப்படுவதாகத் தெரியவில்லை.

உதாரணமாக, தனியார் காணிகளைச் சுவீகரிப்பதாயின், ஒரு பொது நோக்கத்துக்காகக் குறிப்பிட்ட காணியைச் சுவீகரிப்பதற்கான தேவைகுறித்து அமைச்சர் ஓர் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளுமுன்னராக, சுவீகரிப்பு அறிவித்தலை மூன்று மொழிகளிலும் வழங்கி, சுவீகரிப்புக்கு முன்னர் அதுகுறித்து எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான கால அவகாசத்தை வழங்கும்வகையில் இந்த அறிவித்தல் இரு வாரங்களுக்கு முன்னர் வழங்கப்படவேண்டுமென்பது உள்ளிட்ட வகையில் இது சம்பந்தமான விஸ்தாரமான நடவடிக்கைமுறைகளை வகுத்துள்ள காணிச் சுவீகரிப்புச் சட்டம் (LAA) பின்பற்றப்படுதல் வேண்டும். மேலும், அது பாதிப்புற்ற தரப்பினர்களுக்கு நட்ட ஈடு பெற்றுக்கொள்ளும் உரிமையையும், மீளாய்வுச் சபையொன்றுக்கு மேன்முறையீடுசெய்யும் உரிமையையும், நட்ட ஈட்டின் அளவு சம்பந்தமாக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடுசெய்யும் உரிமையையும் வழங்குகின்றது. எவ்வாறாயினும், பாதிப்புற்ற ஜனசமூகங்களின் தகவல்களின் பிரகாரமும், பொதுவாகக் கிடைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களின் பிரகாரமும், மிவூஸ் வீதி மற்றும் ஜாவா லேன் (கீழே பார்க்கவும்) உள்ளிட்டவகையில் நகர்ப்புறப் புத்தாக்கக் கருத்திட்டத்தின் ஒரு பகுதியாக இடம்பெற்ற பலவந்த வெளியேற்றங்கள்

---

[59] சன்டே ரைம்ஸ், "UDA மிவூஸ் வீதியில் வீடுகளை இடித்தழித்ததால் மக்கள் கோபக் கொந்தளிப்பு" 09 மே 2010

[60] பி. பொன்சேகா மற்றும் டி. ஜெகதீஸ்வரன். "இலங்கையில் வடக்கு-கிழக்கில் காணிச் சுவீகரிப்புகள் மற்றும் தொடர்புற்ற பிரச்சினைகளின் அரசியல், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், CPA, நவம்பர் 2013, பக். 43–55 ஐப் பார்க்கவும்.

மற்றும் தனியார் காணிச் சுவீகரிப்பு விடய நிகழ்வுகளில் இத்தகைய நடவடிக்கை முறை பின்பற்றப்படவில்லை.

இது UDA வெளியீடு ஒன்றினாலும் மேலும் வெளிப்படுத்தப்படுகின்றது. அது 2014ஆம் ஆண்டுக்கான மேல் மாகாணத்துக்கான அதன் அபிவிருத்தி நடவடிக்கைகள்குறித்து விபரமாகக் குறிப்பிடுவதோடு, 2014 ஜனவரி அன்றுள்ளபடி, ''கொம்பனித்தெரு மீளபிவிருத்திக் கருத்திட்டம் - படிநிலை 1'' சம்பந்தமாக சுவீகரிப்பு உத்தியோகத்தர் ஏற்கெனவே காணியை உடைமை கொண்டுள்ளாரென்று தெரிவிக்கின்றது (கருத்துரை re S. 38aயின் பிரகாரம்).[61] ஆயினும், செயற்பாடுகளின் விபரமான பிரிவினைத் தகவல்கள் 2014 ஏப்ரல் முடிவில் சுவீகரிப்புச் செயல்முறை முடிவுறுத்தப்படுமென்று குறிப்பிடுகின்றன. காணிச் சுவீகரிப்புச் சட்டம் சுவீகரிப்புக் காணியை அரசு உடைமை கொள்வது சுவீகரிப்புச் செயல்முறையின் இறுதியிலன்றி, அதற்கு முன்னரல்ல என்று தெரிவிப்பது நோக்கப்படுதல் வேண்டும்.

தெளிவாகத் தெரிவது என்னவென்றால், தனியார் சொத்துக்களைச் சுவீகரிப்பதற்கும், அரசு காணிகளை மீளுடைமைகொள்ளுவதற்கும் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள நடவடிக்கைமுறை கொழும்பில் பலவந்த வெளியேற்றங்கள் விடயநிகழ்வில் பின்பற்றப்படவில்லை என்பதாகும். காணிச் சுவீகரிப்புச் சம்பந்தமான ஒளிவுமறைவற்ற, சட்டரீதியான செயல்முறையொன்று இல்லாமை ஒரு பாரிய விசனமேற்படுத்தும் விடயமாகும். உதாரணமாக, மிவூஸ் வீதி வதிவாளர்களுக்குப் பிரயோகிக்கப்படும் காணிச் சுவீகரிப்புச் செயல்முறையும், தன்விருப்பற்ற மீள்குடியேற்ற நியதிகளும் அருகிலுள்ள ஜாவா லேன் (கீழே பார்க்கவும்) வதிவாளர்கள் விடயத்தில் பிரயோகிக்கப் படுபவற்றிலிருந்து கணிசமான அளவுக்கு வேறுபடுகின்றன. இரண்டு விடய நிகழ்வுகளிலுமே சட்டத்தால் விதிக்கப்பட்ட நடைமுறை பின்பற்றப்பட்டதாகத் தென்படவில்லை. அரசு உடைமையான காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களின் விடயநிகழ்வில், உதாரணமாக காசல் வீதி விடயத்தில் (இதுவும் கீழே கலந்துரையாடப்படுகின்றது), UDA பிரதிநிதிகள் அவர்கள் வெளியேறவேண்டுமென்று தெரிவித்தவேளையில், புதிய வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கெனத் தோற்றமளித்த ''விண்ணப்பப்படிவங்களில்'' கையொப்பங்கள் பெறப்பட்டன. பூரண உரித்துரிமை எதுவுமற்ற காணிகளிலுள்ள வீடுகளுக்குப் பதிலாக அவர்களுக்குப் புதிதாக அமைக்கப்பட்ட தொடர்மாடி வீடுகளில் பூரண உரித்துரிமையுடன் நிரந்தரமான வீடுகள் வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. இது அவ்வாறில்லாதபோதிலும், முழுச் செயல்முறைக்கும் அது தன்விருப்பில் இடம்பெறுவதுபோன்ற ஒரு காட்சியை வழங்கியுள்ளது. இத்தகைய தன்னிச்சையானதும், நிலைமாற்றங்களைக் கொண்டதுமான அணுகுமுறைகள் நடவடிக்கைமுறை மற்றும் பொருண்மை சம்பந்தமான உரிமை மீறல்களுக்கு இட்டுச்செல்லும் பாரதூரமான இடர்வரவுகளுக்கு வழிவகுப்பது மாத்திரமன்றி, ஜனசமூகங்கள் மத்தியில் பீதியையும், நிச்சயமின்மையையும் உருவாக்குகின்றன. இதுவே ஜாவா லேனிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் எதிர்நோக்கும் ஒரு நிலைமையாகும்.

---

[61] நகர அபிவிருத்தி அதிகாரசபை 2014இல் மேல் மாகாணத்துக்கான அபிவிருத்திச் செயற்பாடுகள், ஜனவரி 2014

**ஜாவா லேன் விடயநிகழ்வு**

மிவூஸ் வீதி வதிவாளர்களின் அனுபவத்துக்குப் பின்னர், ஜாவா லேன் போன்ற சுற்றயல் பிரதேசங்களிலிருந்த மக்கள் மேலும் தயார்நிலையில் இருந்தனர். ஜாவா லேன் வதிவாளர்களில் பெரும்பான்மையானோர் மிகப் பழைமைவாய்ந்த மலே முஸ்லிம்களாவர். அவர்களிடம் பல தசாப்தங்கள் பழைமைவாய்ந்த உரித்து உறுதிகள் இருந்தன. அவர்கள் காணிச் சுவீகரிப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்செய்தனர். ஆயினும், 2013 அக்டோபரில் உயர் நீதிமன்றம் அவர்களுக்கு 2013 டிசம்பர் 01ஆம் திகதியளவில் காணி உடைமைகளை UDAக்கு கையளிக்குமாறு கூறியது.[62] அது பின்னர் மேலும் ஒருசில மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வருடத்துக்கான வாடகைப் படியாக ஒரு பெரிய தொகை கிடைக்குமென்றும்,[63] பின்னர் இந்தக் காணியின் ஒரு பகுதியில் உயர்ந்த கோபுரக் கட்டிடங்களில் தொடர்மாடி வீடுகள் வழங்கப்படுமென்றும், காணி மீளபிவிருத்திக்காக இந்தியக் கம்பனியாகிய டாட்டா வீடமைப்புக் கம்பனிக்கு வழங்கப்படுமென்றும் அவர்களுக்குக் கூறப்பட்டது. ஆயினும் இந்த விருப்புத்தெரிவை மேற்கொள்ளாதோர் அதற்குப் பதிலாகப் பண ரீதியான நட்ட ஈட்டைப் பெற்றுக்கொள்ளும் விருப்புத்தெரிவு வழங்கப்பட்டது.

ஆயினும், CPA கதைத்த பாதிப்புற்ற குடும்பங்களைச் சேர்ந்த எவருமே எழுத்துமூலம் அவர்களின் உரிமைகள், UDAயின் கடப்பாடுகள் மற்றும் உடைமை நியதிகள் சம்பந்தமாகத் தனியார் அபிவிருத்தியாளரின் கடப்பாடுகள், என்ன வழங்கப்படும், மற்றும் காலச் சட்டகங்கள் சம்பந்தமாக எதுவுமே வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கவில்லை. இந்தப் புதிய கட்டிடங்களில் அவர்களின் உரித்துகள், வடிவமைப்பு, அளவு மற்றும் தொடர்மாடி வீடுகளின் குறித்துரைப்புகள் எவையுமே குறித்த தகவல்களும் அவர்களுக்குக் கிட்டவில்லை. மூன்று வித்தியாசமான அளவுகளிலாவது தொடர்மாடி வீடுகள் அமைக்கப்படுமென்று CPA அறிந்திருந்தபோதிலும், விசேடமாகப் பல வதிவாளர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மாடிகளைக்கொண்ட வீடுகளில் வசித்தமையாலும், பலவருட காலமாக அவர்களின் வீடுகளின் மேம்பாட்டுக்கான எதுவுமே செய்யப்படவில்லையாதலாலும், தொடர்மாடி வீடுகள் மிகவும் சிறியவையாக இருக்குமென்றும் CPAக்குத் தெரிவித்தனர். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், வாழிட இடமாற்றம் அவர்களின் வீடமைப்புத் தரங்கள் வீழ்ச்சியடைவதற்கு இட்டுச்செல்லக்கூடும்.

[62] த சன்டே ரைம்ஸ், "<u>500 கொம்பனித்தெரு குடும்பங்கள் டிசம்பர் 01 அளவில் வீடுகளைவிட்டு வெளியேறவேண்டுமென்று உயர் நீதிமன்றம் தெரிவிப்பு</u>" 27 அக்டோபர் 2013

[63] பாதிப்புற்ற வதிவாளர்கள் ஏதேனும் செலுத்தப்படாது இருந்த கட்டணங்களை செலுத்த ரூ.25,000/- பெற்றனர். 2வருடங்களுக்கான வாடகை உதவிக்கொடுப்பனவும் தெளிவாய் தெரிகின்ற வகையில் குடியிருக்கின்ற வீட்டின் அளவினை விபரித்ததற்கமைவாக ஒரு மாதத்திற்கு ரூ 18,000/- – முதல் ரூ.28,000/- வரையில் வேறுபடும் விதமாக பெற்றனர். அவர்கள் வீட்டு உரிமையாளரிடமிருந்து அவர்கள் 2 வருடங்களுக்கு வீட்டில் குடியிருக்கப் போவதாகவும் வாடகை பெறுமதியினையும் உள்ளடக்கியதொரு ஆவணத்தினை கையளிக்க வேண்டும்.

எவ்வாறாயினும், அதேவேளையில் சில பாதிப்புற்ற வதிவாளர்கள் UDAயினால் அங்கு வருமாறு கேட்கப்பட்டு, அங்கு சென்றவேளையில் பல படிவங்களில் கையொப்பங்கள் பெறப்பட்டதாகவும், அவர்கள் கையொப்பமிட்ட படிவங்களின் பிரதிகள் தமக்கு வழங்கப்படவில்லையென்றும் தெரிவித்தனர். கையொப்பமிட்ட ஆவணங்களின் பிரதிகளைத் தமக்கு வழங்குமாறு UDAக்கு எழுத்தில் செய்யப்பட்ட கோரிக்கைகளுக்குப் பதில் கிடைக்கவுமில்லை, அவை கிடைத்ததாக அறிவிக்கப்படவுமில்லை. அத்தோடு அவர்கள் ஒப்பமிடுமாறு கேட்கப்பட்ட சகல ஆவணங்களும் சிங்களத்தில் இருந்தன. அதேவேளையில் இந்த ஜனசமூகங்கள் பெருமளவுக்கு மலே, முஸ்லிம் மற்றும் தமிழ் பேசுவோராவர். இதன் கருத்து அவர்களுள் பலர் தாம் எதில் கையொப்பமிட்டோம் என்பதை அறிந்திருக்கவில்லை. எனினும் அதிகாரிகளுடன் விவாதம் செய்யவோ, வினாவெழுப்பவோ இடமின்மை காரணமாக அவர்கள் கேட்டவாறு கையொப்பமிட்டுள்ளனர். வதிவாளர்கள் தாம் UDAயிலிருந்தபோது பிரதிகளைத் தருமாறு வலியுறுத்தினால் அல்லது வினாவெழுப்பினால், அவர்கள் முன்பு வாழ்ந்த இடங்களில் தரப்படுமென்று கூறப்பட்ட தொடர்மாடி வீடு பறிபோய்விடக்கூடுமென்று கவலையடைந்தனர்.

## தகவலின்மையும், பங்கேற்பின்மையும்

UDA வெப்தளங்களில் கிடைக்கும் சில மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களைத் தவிர, பாதிப்புற்ற ஜனசமூகங்களுக்கு அவர்களின் வாழிட இடமாற்றம்குறித்து எதுவித தகவலும் வழங்கப்படவில்லை. சிரேஷ்ட அதிகாரிகளின் விஜயங்களும், அனேகமான சந்தர்ப்பங்களில் திரு. கோத்தாபய ராஜபக்ஷ அவர்களின் விஜயங்களும், பாதிப்புற்றோர் சகல சேவைகளையும் பெற்றுக்கொள்ளும் ‘நவீன’ தொடர்மாடி வீடுகளுக்கு இடமாற்றம் செய்யப்படுவரென்று தெரிவிக்கும் கூற்றுகளும் கலந்தாலோசனையாகக் காண்பிக்கப்படுகின்றன. உதாரணமாக, காசல் வீதி வதிவாளர்களிடம் அவர்கள் விரைவில் வெளியேறவேண்டுமென்று தெரிவிப்பதற்கு அவர் விஜயம்செய்தவேளையில் கேள்விகள் கேட்பதற்கோ, நட்ட ஈடு வழங்கப்பட வேண்டுமென்று வாதாடுவதற்கோ, அவர்களது புதிய வீடுகளுக்கு 1 மில்லியன் ரூபாவை அவர்கள் வழங்கவேண்டுமென்ற தேவையை இரத்துச்செய்யவேண்டுமென்று கேட்பதற்கோ இடமளிக்கப்படவில்லை. அக்குடியேற்றத்தில் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக வாழ்ந்த வதிவாளரான நடுத்தர வயதுப் பெண்ணொருவர் கூறியதுபோன்று, “அவரிடத்தில் ஆன்மாவொன்று இருக்கவில்லை.”

2014 பெப்ருவரி 13ஆம் திகதி கொழும்பின் வட-கிழக்குப் பகுதியாகிய வனாத்தமுல்லையில் குறைந்த வருமானம் பெறும் ஜனசமூகத்தினர் வாழுமிடத்துக்கு திரு. ராஜபக்ஷ இராணுவ அதிகாரிகளுடன் விஜயம்செய்தவேளையில், உள்ளூர் ஜனசமூக அமைப்பொன்றின் தலைவர் பலவந்த வெளியேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பெரிய வீடுகளும், நட்ட ஈடுகளும் அவசியமென்று தெரிவித்து, புதிய வீடுகளுக்குப் பணம் செலுத்துமாறு கேட்பதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தார். பின்னர் அவருக்கு இனந்தெரியாதோரிடமிருந்து அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்புகள் கிடைத்ததோடு, இரண்டு தினங்களுக்குப் பின்னர் இனந்தெரியாதோர் அவரைக் கடத்தி,

கொழும்பின் எல்லைப்புறங்களுக்குக் கொண்டுசென்று பயமுறுத்திய பின்னர் வாகனத்திலிருந்து வெளியே தள்ளியுள்ளனர்.[64]

இந்த 'ஒருவழிக் கலந்தாலோசனையின்' நல்ல உதாரணம் 2013 ஜனவரி 28ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சும், நகர்ப்புற அபிவிருத்தியும் (MoD&UD) மீளபிவிருத்திக்குக் காணிகள் சுவீகரிக்கப்பட்ட கொம்பனித்தெரு வதிவாளர்களுக்கென நடத்திய நிகழ்ச்சித்திட்டமாகும். இதில் பிரசன்னமாகவிருந்த சில வதிவாளர்கள் தாமும் எவ்விதக் கரிசனை விடயங்களையும் எழுப்பாதவாறு இந்த 'விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின்'போது பாதுகாப்புச் செயலாளரினாலும், இராணுவத்தினராலும் பயமுறுத்தப்பட்டதாகவும், இது ஓர் 'ஒருவழிப்பாதையாக' அமைந்த கூட்டமென்றும் CPAக்குத் தெரிவித்தனர். மேலும், சில வெளிப்படையாகப் பேசும் வதிவாளர்கள் கூட்டம் இடம்பெறுமுன்னரே எதுவிதப் பிரச்சினைகளையும் ஏற்படுத்தவேண்டாமென்று எச்சரிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

UDAயினாலும், அரசாங்கத்தினாலும் பங்கேற்பு மற்றும் கலந்தாலோசனை இடம்பெறுகின்றதென்னும் கோரிக்கைக்கு நேர்விரோதமாக, மீள்குடியேற்ற இடங்களின் வடிவமைப்புக்குறித்து பாதிப்புற்ற ஜனசமூகங்களைச் சேர்ந்த எவருமே கலந்தாலோசிக்கப்படவில்லை. சகல பலமாடிக் கட்டிடங்களும் ஒரேவிதமான அமைப்பைக் கொண்டிருப்பதோடு, ஒவ்வொரு தொடர்மாடி வீடும் அண்ணளவாக 400 சதுர மீட்டர் பரப்பளவையும், ஏக்கரொன்றுக்கு ஒரு குறிப்பிட்ட நிலையான அடர்த்தியையும் கொண்டுள்ளன. இக்கட்டிடங்கள் அவற்றில் குடியமரப்போகும் மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கலாசாரக் குறித்துரைப்புகளுக்கும், தேவைகளுக்கும் எவ்விதத்திலும் கவனம்செலுத்தவில்லை.

முறைமையான தகவல்கள் எதுவும் இல்லாதநிலையில் பல ஜனசமூகங்கள் பலவந்த வெளியேற்றம்குறித்த பீதியில் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. உதாரணமாக, UDA தனது வெப்தளத்தில் தாம் ''முதலீட்டாளர்களைத் தேடிக்கொண்டிருக்கும்'' பல இடங்கள் குறித்துப் பட்டியலிட்டுள்ளது.[65] ஆயினும், கொழும்பு 07இல் உள்ள அத்தகைய ஓர் இடத்தைச் சேர்ந்த வதிவாளர்களை CPA சந்தித்தவேளையில், அவர்கள் தமது காணி மீளபிவிருத்திக்குத் தெரிவுசெய்யப்பட்டிருப்பதை அறிந்திருந்தபோதிலும், அவர்களின் வீடுகளுக்கு என்ன நடக்குமென்பதுபற்றியோ, தாம் புதிய இடமொன்றுக்குச் செல்ல வேண்டுமா, அப்படியாயின் அது எப்போது, அபிவிருத்தியாளர்கள் கண்டறியப்பட்டனரா மற்றும் மீள்குடியேற்ற மற்றும் நட்டஈடு விடயங்களில் அவர்களின் விருப்புத்தெரிவுகள் குறித்த எதுவித தகவலையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை.

இவையனைத்திலும் செயல்முறையின் மேலிருந்துகீழ் கட்டளை வழங்கும் இராணுவ மயப்படுத்தப்பட்ட தன்மையும், எவ்விதமான கேள்விக்கோ, மறுப்புக்கோ இடமளிக்காத

[64] தி ஐலன்ட், ''வனாத்தமுல்ல கடத்தல் சம்பவம்: வெள்ளை வான் நிகழ்வுணர்வுக்குப் பதிலாக சிவப்பு பஜரோ – எரான்'' 28 பெப்ருவரி 2014

[65] UDA தனது இணையத்தளத்தில் ''முதலீட்டாளர்களைத் தேடிக்கொண்டிருக்கிறது''

தன்மையும், பயனுறுதியுடன் UDAஐயும், அரசாங்கத்தையும் எதிர்த்துநின்று, பாதிப்புற்ற ஜனசமூகங்கள் சார்பில் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய ஜனசமூக அடிப்படையிலான குழுக்களின் வளர்ச்சிக்குத் தடையாகவுள்ளன.

## நஷ்டஈடு வழங்க மறுத்தலும், பாதிப்புற்ற மக்களைச் செலவிட வைத்தலும்

மக்களுக்கு அவர்கள் இழந்த காணிகள், வீடுகள், சொத்துக்கள் மற்றும் வியாபாரத் தொழில்களுக்கான நட்ட ஈடு மறுக்கப்படுவது மாத்திரமன்றி, அரசுடைமையான காணிகளிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்படுவோர் புதிய வீடுகளைப் பூரணமாகப் பெற்றுக்கொள்வதற்குக் கணிசமான தொகைப் பணத்தையும் செலுத்தவேண்டியுள்ளது. வாழிட இடமாற்றப் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு தொடர்மாடி வீடும் 7 மில்லியன் ரூபா பெறுமதியானதென்று UDAயும், அரசாங்கமும் தெரிவிக்கின்றனர். அவை பின்வரும் கொடுப்பனவு நியதிகளுக்கமைவாக மீள்குடியேறுவோருக்கு 1 மில்லியன் ரூபாவுக்கு வழங்கப்படவுள்ளன: முதல் தவணைத் தொகையாக ரூபா 50,000/- முன்கூட்டியே செலுத்தப்படவேண்டும். முதல் மூன்று மாத காலப்பகுதியினுள் மேலும் ரூபா 50,000/- பேணல் மற்றும் பராமரிப்புக்காக மூன்று தவணைகளில் செலுத்தப்படவேண்டும். அடுத்த 20 வருட காலப்பகுதிக்கு மாதாந்தம் ரூபா 3,960/- செலுத்தப்படவேண்டும். எனவே பலவந்தமாக வெளியேற்றப்படுவோர் தாம் நீண்டகாலமாகக் கணிசமான அளவு முதலீடு செய்திருந்த வீடுகள், கட்டமைப்புகள் மற்றும் சில விடயநிகழ்வுகளில் வியாபாரத் தொழில்களையும் இழந்தநிலையில் ஓர் இரட்டைச் சுமையைத் தாங்கிக் கொள்ளுதல் வேண்டும். அத்தோடு ரூபா 100,000/- உடனடியாகச் செலுத்தப்பட வேண்டிய நிலையில் 1 மில்லியன் ரூபா கடன் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

*(தொடர்மாடி வீடுகளைப் பெற்றுக்கொள்வோருக்குத் தகவல் வழங்கும் UDAயின் கடிதத்தை (சிங்களத்தில் மட்டும்) பின்னிணைப்பு 3இல் பார்க்கவும்.)*

**காசல் வீதி விடயநிகழ்வு**

2013 நவம்பர் 22 – 24 திகதிகளில் பொரளை, காசல் வீதிக்கு வடக்குப் பகுதியில் வாழ்ந்த வருமானங்குறைந்த குடியிருப்பைச் சேர்ந்த டசின் கணக்கான குடும்பங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மீள்குடியேற்றப் பகுதிக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இக்குடும்பங்கள் அரசுக்குச் சொந்தமான இக்காணியில் பல தசாப்த காலமாக வாழ்ந்துவந்தனர். அவர்களுக்குத் தெளிவான உடைமை உரித்துரிமைகள் இல்லாத வேளையிலும் அவர்களுக்கு மாநகர சபை நீர் மற்றும் மின்சார வழங்கல் சேவைகளைப் பூரணமாக வழங்கியதோடு, பல உத்தியோகபூர்வ ஆவணங்களில் அவர்களின் முகவரிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. *(அரசு காணிகள் சுவீகரிப்புச் சட்டம்குறித்த தகவல்களை அறிந்துகொள்வதற்கு பின்னிணைப்பு 2ஐப் பார்க்கவும்.)*

வீடுகள் இடித்தழிக்கப்படுவதற்கு முன்னர் CPA இந்த ஜனசமூகத்தினரைச் சந்தித்த வேளையில், சில குடும்பங்கள் சிறிய வீடுகளில் வசிக்கும் வறிய மக்களாகவிருந்த

போதிலும், பலர் வீடுகளில் கணிசமான அளவு முதலீடு செய்திருந்தமையையும், பெருக்கமடையும் குடும்பத்தின் தேவைகளுக்காக ஒன்றுக்கு மேற்பட்ட மாடிகளை அமைத்திருந்தமையையும் அவதானிக்க முடிந்தது. வேறு பலர் பலசரக்குக் கடைகள், வாகனம் திருத்துமிடங்கள், மற்றும் ஏனைய வியாபாரத் தொழில்கள் போன்ற சிறு தொழில்முயற்சிகளை நடத்திக்கொண்டிருந்தனர். ஆயினும் இந்த முதலீடுகளில் எவையுமோ, ஒரு வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்தனவென்ற உண்மையோ கவனத்திற்கொள்ளப்படவில்லை.

CPAயினால் நேர்முகங்காணப்பட்ட காசல் வீதி வதிவாளர்கள் இராணுவத்தையும், UDA அதிகாரிகளையும் தவிர, மீள்குடியேற்ற இடங்களில் வீடுகளை ஒதுக்கியளிப்பதில் ஆளுங்கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதிகளும் குறிப்பான பாத்திரத்தை வகிப்பதாகத் தெரிவித்தனர். வீடுகள் ஒதுக்கியளிப்பு தன்னிச்சைப்படி இடம்பெறுவதாகும். உண்மையில், காசல் வீதிக்கு மறுபுறுத்தில் தென்பகுதியில் வாழ்ந்தோரும், ஒரு வருடத்துக்கு முன்னர் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு, சில தற்காலிகக் குடிசைகளில் வாழ்ந்துவருவோருமான ஏனைய பல குடும்பங்களுக்குப் புதிதாக அமைக்கப்பட்ட மீள்குடியேற்ற வீட்டுத்தொகுதியில் வீடுகள் வழங்கப்படவில்லை என்பதை அவர்கள் சுட்டிக்காட்டினர்.

ஜனசமூகத்தினர் தம்மை ஒன்றாக ஒரே கட்டிடத்தில் 2–3 மாடிகளில் மீள் குடியமர்த்துமாறு மன்றாடியபோதிலும், அவர்கள் மீள்குடியேற்ற இடத்தில் பல்வேறு கட்டிடங்களில் சிதறலாகக் குடியமர்த்தப்பட்டனர். உண்மையில் உறவுநிலையிலான குடும்பங்களும், அடுத்த வீடுகளில் வசித்தோரும் அருகருகே வீடுகளைக் கொண்டிருப்பது மறுக்கப்பட்டது. வதிவாளர்கள் மீள்குடியேற்ற இடத்தில் நிர்மாணத்தின் தரம் மோசமானதென்றும், வீடுகள் மிகச் சிறியவையென்றும் CPAக்குத் தெரிவித்தனர். உண்மையில், வனாத்தமுல்லையில் பலவந்த வெளியேற்றத்தை எதிர்த்துநின்ற ஜனசமூகத் தலைவர் தெரிவித்தவாறு, தொடர்மாடி வீடுகள் ''வீடுகளைப் போலன்றி, சிறைக்கூடங்களைப்போலவே இருந்தன''.[66]

அவர்களுக்கு வீடுகள் ஒதுக்கியளிக்கப்பட்ட பின்னர், சகல குடும்பங்களும் ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்ஷவுடன் சேர்ந்துநின்று புகைப்படம் எடுத்துக கொள்ள அழைக்கப்பட்டதாகவும், அதைத்தொடர்ந்து அவர்களுக்கு வழங்கப்படவுள்ள புகைப்படங்களை வீடுகளினுள் தொங்கவிடவேண்டுமென்றும் கூறப்பட்டதாக CPA அறிந்துகொண்டது. மீள்குடியேற்றம் செய்யப்பட்ட காசல் வீதி வதிவாளர்களும் ஆரம்ப நாட்களில் உயர்மட்டங்களிலான இராணுவ மேற்பார்வைகள்குறித்து முறையிட்டனர்.

[66] தி ஐலன்ட், ''வனாத்தமுல்ல கடத்தல் சம்பவம்: வெள்ளை வான் நிகழ்வுணர்வுக்குப் பதிலாக சிவப்பு பஜரோ – எரான்'' 28 பெப்ருவரி 2014

## நஷ்டஈடு வழங்குவதில் தாமதங்கள்

தொடர்மாடி வீடொன்றுக்குப் பதிலாக நட்ட ஈட்டு விருப்புத்தெரிவை மேற்கொண்ட கொம்பனித்தெரு வதிவாளர்கள், இடித்தழிக்கப்பட்ட தமது வீடுகளுக்கான நட்ட ஈட்டைப் பெற்றுக்கொள்ளும் செயல்முறையில் தீவிர அதிருப்தியை வெளியிட்டனர். வதிவாளர்கள் இடித்தழிப்புக்கு முன்னராக UDAயுடன் நட்ட ஈட்டுத்தொகை சம்பந்தமான ஓர் உடன்பாட்டுக்கு வர விரும்பியிருந்ததாகவும், இப்பொழுது தமக்கு எவ்வளவு நட்ட ஈடு கிடைக்குமென்பது சம்பந்தமாக நிச்சயமற்ற நிலையே காணப்படுவதாகவும் தெரிவித்தனர். இடித்தழிப்புக்கு முன்னர் அரசாங்கம் வீடுகளை மதிப்பீடு செய்ததா என்பதும், அது எவ்வாறு கணிப்பீடுசெய்யப்பட்டதென்பதும், அத்தொகை எவ்வளவென்பதும், வீடுகள் மதிப்பீடுசெய்யப்படாவிட்டால், இப்பொழுது வீடுகள் அங்கே இல்லாதநிலையில், காணிகள் மாத்திரம் இருக்கும்நிலையில், எந்த வகையில் மதிப்பீடு இடம்பெறுமென்பதும் அவர்களுக்குத் தெரியாத விடயங்களாக உள்ளன. மாடிவீடுகளுக்குப் பதிலாக நட்ட ஈடுகளைத் தெரிவுசெய்தவர்களுக்கு ஒரு வருடத்துக்கான வாடகைப் படிகள் வழங்கப்பட்டு, முழு நட்ட ஈட்டையும் ஆறு மாத காலத்தினுள் பெற்றுக்கொள்வரென்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும், தற்போது இறுதி நட்ட ஈட்டுத்தொகை என்னவென்று அறியாதநிலையில், இவர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டுநடத்தமுடியாமல், நிர்க்கதியாக விடப்பட்டுள்ளனர்.

## வாழ்வாதாரங்கள் மற்றும் கல்விக்கான அணுகுவழிகளைக் குடைசாய்த்தல்

வீடமைப்பு சம்பந்தமான கரிசனைக் கவலைகள் ஒருபுறமிருக்க, பலவந்த வெளியேற்றங்கள் மற்றும் வாழிட இடமாற்றம் என்பவை வாழ்வாதார நிலைமைகளில் ஏற்படுத்தும் தாக்கங்களே பாதிப்புற்ற ஜனசமூகங்கள் மத்தியில் பாரிய கவலையை ஏற்படுத்துவதாகும். உதாரணமாக, முன்னாள் மிவூஸ் வீதி வதிவாளர்களுக்குத் தெமட்டகொடையில் வீடுகள் கொடுக்கப்பட்டாலும், அது 6 கி.மீ. தூரத்துக்கும் அப்பால் உள்ளது என்னும் நிகழ்வுண்மை அது வாழ்வாதாரங்களில் பாதகமான பாதிப்புகளை ஏற்படுத்துமென்பதை எடுத்துக்காண்பிக்கின்றது. மிவூஸ் வீதியில் வசித்த அனேகமானோர் அருகாமையிலேயே வேலைபார்த்ததும், சிறிய வியாபாரத் தொழில்களை வைத்து நடத்தியதுமே இதற்கான காரணங்களாகும். அன்றாடக் கூலி வேலை அல்லது விதிமுறையற்ற தொழில்களில் ஈடுபட்டிருந்த கொம்பனித்தெரு வதிவாளர்கள் விடயத்தில், தினமும் பிரயாணம்செய்வதற்கு எடுக்கும் நேரம் மற்றும் செலவு என்பவை அவர்களின் வருமானத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். ஏனைய இடங்களிலுள்ள வேறு நகரங்களைப்போலவே, கொழும்பிலுள்ள குறைந்த வருமானக் குடியேற்றங்களில் சிறிய மற்றும் வீட்டில் இடம்பெறும் தொழில்முயற்சிகள் உள்ளன. இவை அவர்கள் சேவை வழங்கும் சிறிய சமூகங்களின் அரசியல் பொருளாதாரத்தோடு தொடர்புற்றவையாகும். ஜனசமூகங்களை உடைத்து, உயர்வான கட்டிடங்களில் அவர்களை மீளக் குடிமயர்த்துதல், வீட்டில் இடம்பெறும் வாகன சேவை/திருத்துதல் போன்ற சில தொழில்முயற்சிகள் இனிமேலும் சாத்தியப்படமாட்டா என்பதே கருத்தாகும். உதாரணமாக, காசல் வீதியிலிருந்து வாழிட இடமாற்றம்

செய்யப்பட்ட வதிவாளர்கள் சிலர் பல அடுக்குகள்கொண்ட தொடர்மாடி வீடுகளின் வடிவமைப்பும், பயன்பாட்டு மட்டுப்பாடுகளும் பலசரக்குக் கடைகள் போன்றவற்றை நடத்துவதைத் தடைசெய்தன அல்லது இடர்களை விளைவித்தனவென்று CPAக்குத் தெரிவித்தனர்.

பாதிப்புற்ற ஜனசமூகங்கள் வாழிட இடமாற்றம் தமது பிள்ளைகளின் பாடசாலைக் கல்வியில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துமென்று தாம் அச்சமடைவதாக CPAக்குத் தெரிவித்தனர். உதாரணமாக, மிவூஸ் வீதி வதிவாளர்கள் தாம் உறவினர்களின் இடங்களுக்கு அல்லது தமது பிள்ளைகள் கல்விகற்ற பாடசாலைகளிலிருந்து வெகுதூரம் செல்லவேண்டியேற்பட்டதால் தமது பிள்ளைகளின் கல்வி இடைநடுவில் குழம்பியதாகத் தெரிவித்தனர். இவ்வாறே, ஜாவா லேன் வதிவாளர்களும் நகர எல்லைகளுக்கு வெளியில் தற்காலிகமாக வாழிட இடமாற்றத்தில் செல்வது அல்லது வேறு பிரதேசத்தில் வாடகை வீட்டில் வசிப்பது தமது பிள்ளைகளுக்கு இதேவிதமான பிரச்சினைகளை உருவாக்குமென்று தெரிவித்தனர். மேலும், தாம் செல்லக்கூடிய பாடசாலைகளைப்போலச் சிறந்தவையென்று கருதப்படாத பாடசாலை வலயங்களுள் வாழிட இடமாற்றம் பெறும்போது தரமான கல்விக்கான அணுகுவழிகுறித்து விசனமடைந்துள்ளனர்.

## விதப்புரைகள்

போருக்குப் பிந்திய இலங்கை, ஆட்சிமுறைக்கும், அபிவிருத்தி வாய்ப்புகளுக்குமான புதிய முன்னுரிமை விடயங்களை வழங்குகின்றது. CPA இலங்கை அரசாங்கத்தின் நகர்ப்புற அபிவிருத்திக்கான அர்ப்பணவுணர்வை வரவேற்கின்றது. அருகிலுள்ள நாடுகளினதும், தொலைதூரத்திலுள்ள நாடுகளினதும் அனுபவங்களிலிருந்து நகர ஆட்சிமுறைச் சிக்கல்கள் மற்றும் போட்டியிடும் முன்னுரிமைகளின் எண்ணிறந்த தன்மை என்பவற்றை வைத்து நோக்கும்போது, அனைவரையும் தழுவிநிற்கும் நிலைபேறான நகரங்கள் பல பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளது. பின்வரும் விதப்புரைகள் பிரதானமாகப் பலவந்த வெளியேற்றப் பிரச்சினைகளை இலக்குவைப்பதாயினும், அவை அரசினதும், சிவில் சமூகத்தினதும் சகல பிரிவுகளும் அச்சவால்களுக்கு முகங்கொடுக்கும்வகையிலான ஒரு பரந்த இலட்சியத்துக்கும், நிலைபேறான செயற்பாடுகளுக்கும் அர்ப்பணவுணர்வு காண்பிக்கவேண்டிய ஓர் அவசரத் தேவை உள்ளது என்னும் விளக்கத்துடனேயே மேற்கொள்ளப்படுகின்றன.

### இலங்கை அரசாங்கத்துக்கு

### 1. நகர்ப்புற அபிவிருத்திக் கொள்கையில் அசையா நியமக் கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்துதல்

UDA என்னதான் கூறினாலும் அதற்கு நேர்விரோதமாக அதன் அணுகுமுறை சுதேசத் தன்மைகொண்டதோ, இந்த மண்ணிலிருந்து முளைத்ததோ அல்ல. அது ஜனநாயகத்துக்குப் பதிலாகத் தொழில்நுட்பநாயகத்துக்கு சலுகை வழங்கும் (நவ-தாராளவாதம் என்றும் கூறலாம்), பொதுமக்கள் நலனைவிடத் தனியார் மூலதனத்துக்குச் சலுகை வழங்கும், சமூக அபிவிருத்திக்குப் பதிலாக மீள்படிமப்படுத்தல் மற்றும் மீள்குறியிடல் என்பவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கும்

வழமையான சேர்மானப்பொருள் பட்டியலாகும். இந்தவகையில் குறைந்தது முக்கியமான கொள்கை நகர்வுகள் தீர்மானகரமானவையாகும்.

அ. நகரத்துக்குச் சமூக மற்றும் பொருளாதாரப் பெறுமதியைச் சேர்ப்பதில் மக்கள், விசேடமாக குறைந்த வருமானம்பெறும் நகர்ப்புற ஜனசமூகங்கள் ஒரு தடைக் கல்லென்று எண்ணும் அணுகுமுறையிலிருந்து விலகிச்சென்று, அவர்களைப் பங்குதாரர்களாகவும், அரசியலமைப்பின் எழுத்து மற்றும் உணர்வுக்கு இசைவானமுறையில் அவர்களை மன்னர்களாக மதிக்கும் ஓர் அணுகுமுறையைக் கடைப்பிடித்தல்.

ஆ. கொழும்பு மாநகர சபையைப் பலவீனப்படுத்துவதற்குப் பதிலாக, பங்கேற்பு, ஒளிவுமறைவின்மை மற்றும் வகைப்பொறுப்பு என்பவற்றின் பலம்வாய்ந்த பொறிமுறையமைப்புகளை உறுதிசெய்தல் மற்றும் தொழில்சார் தேர்ச்சிகளைக் கட்டியெழுப்புதல்மூலம் ஜனநாயகத் தீர்மானம் மேற்கொள்ளலுக்குப் புத்துயிரூட்டுதல்.

இ. UDAயை இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலைசெய்து, அது ஒரு சுயாதீன ஜனநாயக வகைப்பொறுப்பின்கீழான நிறுவனமாகவும், பொது மற்றும் தனியார் துறைகளில் காணப்படும் தொழில்சார் திறன்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிறுவனமாகவும் கருமப்பட உதவிசெய்தல்.

ஈ. காணிச்சுவீகரிப்புகளால் பாதிப்புற்ற அனைவரும் காணிச் சுவீகரிப்பின் நோக்கம், மற்றும் சுவீகாரத்தின் விஸ்தாரம் மற்றும் சுவீகரிப்பு நியதிகள் சம்பந்தமாகக் கேள்வியெழுப்பக்கூடியவகையில் ஓர் ஒளிவுமறைவற்ற, நம்புதகவுள்ள செயல்முறை பயனுறுதியுள்ள நீதிமுறைசார் மேற்பார்வையுடன் இருப்பதை உறுதிசெய்தல்.

## 2. பலவந்த வெளியேற்றங்களுக்கெதிராகப் பாதுகாப்பு வழங்கும்வகையில் சட்டச் சீர்திருத்தங்களை உறுதிசெய்தல்

காணி அபகரிப்பு என்பது நீண்டகாலமாகவே இலங்கையின் கருத்து வேறுபாடுகளுக்குரிய சமூக அரசியல் மற்றும் சட்ட விவகாரமாக இருந்துவருகின்றது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீளிணக்க ஆணைக்குழுகூட (LLRC) பிரச்சினையின் பாரதூரத் தன்மையை அங்கீகரித்துள்ளதோடு, இது தொடர்பில் பல விதப்புரைகளை முன்வைத்துள்ளது. இவை இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மேலும், இதற்கு முன்னர் CPAயினால் வலியுறுத்தப்பட்ட பல கரிசனை விடயங்களும்,[67] வடக்கு–கிழக்கில் காணி அபகரிப்பு நடைமுறைகளும், கொள்கைகளும் மேலும் அதிகரிக்கும்வகையில் இன்று தேசிய ரீதியில் இயைபுள்ளவையாக மாறியுள்ளன.

---

[67] பி. பொன்சேகா மற்றும் டி. ஜெகதீஸ்வரன். ''இலங்கையில் வடக்கு-கிழக்கில் காணிச் சுவீகரிப்புகள் மற்றும் தொடர்புற்ற பிரச்சினைகளின் அரசியல், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், CPA, நவம்பர் 2013; எம். ரஹீம், ''நீண்டகால இடம்பெயர்வுகள், அவசரத் தீர்வுகள்: இலங்கையில் நீண்டகாலமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிலையான தீர்வுகள்'', CPA 2013; பி. பொன்சேகா மற்றும் எம். ரஹீம், ''கிழக்கு மாகாணத்தில் காணி – அரசியல், கொள்கை மற்றும் முரண்பாடு'' CPA மே 2010; பி. பொன்சேகா மற்றும் எம். ரஹீம், ''வட மாகாணத்தில் காணி – யுத்தத்துக்குப் பின்னரான அரசியல், கொள்கை மற்றும் நடைமுறைகள்'' CPA, டிசம்பர் 2011

காணி சம்பந்தமாக இதற்கு முன்னரும் CPA விடுத்துள்ள அறிக்கைகளின் விதப்புரைகளை வலியுறுத்துவதோடு, பின்வரும் விடயங்களை உறுதிசெய்வதற்கு காணி அபகரிப்பு மற்றும் தன்விருப்பற்ற மீள்குடியேற்றம் சம்பந்தமான சகல சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் நடவடிக்கைமுறைகளையும் பூரணமான, பங்கேற்பு முறையிலான மீளாய்வுக்குட்படுத்துமாறு நாம் அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

அ. அவை, சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தரநியமங்களுக்கு இணக்கமான முறையில் பலவந்த வெளியேற்றங்களுக்கெதிராக மிகவுயர்ந்த மட்டங்களிலான பாதுகாப்பை வழங்குபவையாக இருத்தல் வேண்டும்.

ஆ. NIRPயின் கொள்கைக் கோட்பாடுகள் சட்டங்களில் வைத்தமைக்கப்படுதல் வேண்டும்.

இ. பாதிப்புற்றோர் வாழிட இடமாற்றம்செய்யப்பட்டாலும்சரி, அவ்வாறில்லாவிட்டாலும் சரி, அவர்களுக்குச் சட்டரீதியான உரித்துரிமை இருந்தாலும்சரி, இல்லாவிட்டாலும் சரி, அவர்களுக்கு காணி, வீடுகள், சொத்துக்கள், மற்றும் வியாபாரத் தொழில்களுக்கு நட்ட ஈடு பெற்றுக்கொள்ளும் உரிமை அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

ஈ. நீண்டகாலமாகச் சேவைகளைப் பெறுவோரும், பயன்பாட்டு உடன்படிக்கைகளால் அங்கீகரிக்கப்பட்டோருமான அரச காணிகளில் குடியிருக்கும் வறிய ஜனசமூகங்களின் பூரண நட்ட ஈட்டுக்கும், பங்கேற்புக்கும், நிவாரணங்களுக்குமான உரிமைகள் பயனுறுதியுள்ளவகையில் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

உ. பாதிப்புற்ற ஜனசமூகங்களுக்கு சுவீகரிப்புக்கு முன்னரான பூரண தகவல்கள் வழங்கப்படுவதோடு, அவர்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவதற்கெதிராகக் கேள்வியெழுப்பும் உரிமையும், தகுதிவாய்ந்த, சுயாதீன நியாயசபை ஒன்றின் முன்பாக நட்ட ஈடு மற்றும் வாழிட இடமாற்றம் சம்பந்தமான நடவடிக்கைமுறை மற்றும் பொருண்மை நியதிகள்குறித்துக் கேள்வியெழுப்பும் உரிமையும் இருப்பதோடு, ஒரு பொருத்தமான நீதிமன்றத்தில் மேன்முறையீடுசெய்யும் உரிமையும் இருத்தல் வேண்டும்.

## நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு

### 3. தன்விருப்பற்ற மீள்குடியேற்றம் சம்பந்தமாகத் தற்போதுள்ள கொள்கைச் சட்டகங்களைப் பின்பற்றி, அவற்றை நடைமுறைப்படுத்துதல்

முன்பே வலியுறுத்தப்பட்டதுபோன்று, கொழும்பில் இடம்பெறும் பலவந்த வெளியேற்றங்கள் மற்றும் மீள்குடியேற்றங்கள் பாரிய அபிவிருத்திக் கருத்திட்டத்தின் ஒரு பகுதியாக எப்பொழுதும் காண்பிக்கப்பட்டபோதிலும், NIRP பின்பற்றப்படுவதில்லை. இச்சூழமைவில் CPA நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் பின்வரும் விடயங்களை நிறைவேற்றுமாறு அழைப்புவிடுக்கின்றது:

அ. கொழும்பில் நகர்ப்புறப் புத்தாக்கத்தின் ஒரு பகுதியாக பலவந்தமாக வெளியேற்றப்படுவோருக்கு இரட்டை நியமங்கள் பிரயோகிக்கப்படுவதையும்,

அவர்கள் பாரபட்சமாக நடத்தப்படும் நடைமுறையையும் முடிவுக்குக் கொண்டுவந்து, தன்விருப்பற்ற மீள்குடியேற்றம் சம்பந்தமான தேசியக் கொள்கை வழங்கும் பாதுகாப்புகள் மற்றும் சர்வதேச நிதியளிப்புடன் வரும் தெற்கின் அதிவேக பாதைத் திட்டம் மற்றும் காலியிலும், கண்டியிலும் உலக வங்கி நிதியளிப்புத் திட்டம் என்பவற்றால் பாதிப்புறுவோர் அனுபவிக்கும் பாதுகாப்புகள் மற்றும் காப்பேற்பாடுகளை அவர்களுக்கும் வழங்குதல்.

ஆ. NIRPயின் குறிப்பான கோட்பாடுகளுள் ஒன்றான ஒவ்வொரு விடயநிகழ்விலும் தன்விருப்பற்ற மீள்குடியேற்றக் கருத்திட்டத்துக்கான மாற்றுவழிகள் மற்றும் கருத்திட்டத்தினுள் மாற்றுவழிகள் மீளாய்வுசெய்யப்படுவதன்மூலம் இயன்ற அளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளன என்பதை எடுத்துக்காட்டவேண்டிய கடப்பாட்டை ஏற்றுக்கொள்ளுதல்.

இ. NIRP பிரயோகத்தில் கடந்த காலத்தின் சிறப்பான நடைமுறைகளிலிருந்து விடயங்களைக் கற்றுக்கொள்ளுதல். உதாரணமாக, தெற்கின் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்ட விடயநிகழ்வில் இவை பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருந்தன:[68]

- நட்ட ஈட்டு நியதிகளைப் பாதிப்புறுவோர் பேச்சுவார்த்தைகள்மூலம் தீர்மானிக்க உதவும் வாய்ப்புரிமைகளை வழங்கிய காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றக் குழுவொன்றை (LARC) ஏற்படுத்துதல்.
- உரித்துரிமைகள் இல்லாதோரையும் நட்ட ஈட்டுக்கும், வாழ்வாதாரங்களை மீண்டும் ஆரம்பிக்கும் ஆதரவுகளுக்கும் உரித்துள்ளவர்களாகவும் அங்கீகரிக்கப்பட்டமை.
- மேலதிக உதவிகள் வழங்கப்பட்ட இலகுவில் பாதிப்புறக்கூடிய குழுக்களை இனங்கண்டமை.
- பதிவுபெற்ற விதிமுறையான தொழில்முயற்சிகளும், விதிமுறையற்ற தொழில்முயற்சிகளும் நட்ட ஈட்டுக்குத் தகுதியுள்ளவையாக அங்கீகரிக்கப் பட்டமை.
- வாழிட இடமாற்றப் பகுதிகள் பாதிப்புற்ற ஜனசமூகங்களுடன் கலந்தாலோசித்துத் தெரிவுசெய்யப்பட்டமையும், அவை அவர்கள் ஆரம்பத்தில் வசித்த வீடுகளிலிருந்து 1 கி.மீ. தூரத்தினுள் வழங்கப்பட்டமையும்.

## 4. ஏற்கெனவே பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர்களின் உரிமைமீறல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு, கொழும்பில் வெளியேற்ற இடர்வரவுகளை எதிர்நோக்குவோருக்கு நீதி கிட்டுவதை உறுதிசெய்தல்

மேலே விதந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளின் ஒளியில், கொழும்பில் பலவந்த வெளியேற்றங்கள் சம்பந்தமாகப் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்குமாறு CPA நகர அபிவிருத்தி அதிகாரசபையையும், அரசாங்கத்தையும் வேண்டிக்கொள்ளுகின்றது:

---

[68] ஷர்னி ஜயவர்தன, ''பாதை உரிமை: ஒரு மீள்குடியேற்றப் பயணம்'' வறுமைப் பகுப்பாய்வுக்கான நிலையம், 2011

அ. செயல்முறை மற்றும் இதுவரையிலான அனுபவம் என்பவற்றைப் பூரணமாக மீளாய்வுசெய்யும்வரையில் இடம்பெறவுள்ள மேலதிக வெளியேற்றங்களை நிறுத்துவதாக அறிவித்தல்.

ஆ. URP சம்பந்தமான சகல தகவல்களையும், விசேடமாகக் காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றம் சம்பந்தமான சகல அம்சங்களையும் பகிரங்கப்படுத்துதல். இவை மதிப்பாய்வுகளின் பெறுபேறுகள், மீளபிவிருத்திக்கு இனங்காணப்பட்ட இடங்கள், தனியார் மற்றும் அரசு காணிகளுக்கிடையிலான எல்லை வரைவுகள் மற்றும் உத்தேச காணிச் சுவீகரிப்பு மற்றும் வாழிட இடமாற்றம் சம்பந்தமான கால அட்டவணை என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

இ. சுவீகரிப்பு மற்றும் வாழிட இடமாற்றம் சம்பந்தமான சகல அம்சங்களிலும் இராணுவத்தை அகற்றி, NIRPயின் கொள்கைக் கோட்பாடுகளோடு ஒட்டிநிற்றல். இந்த ஆவணத்தின் பகுதி 1இல் வலியுறுத்தப்பட்டுள்ள தேசிய வீடமைப்புக் கொள்கை எதிர்பார்க்கும் அணுகுமுறை உள்ளிட்டவகையிலான சட்டத்தின் உரிய செயல்முறையைப் பின்பற்றி, சகல சட்டரீதியான நிவாரணங்களுக்கான அணுகுவழிகளையும் உறுதிசெய்தல்.

ஈ. தன்விருப்பற்ற, மீள்குடியேற்றங்களை இல்லாமற்செய்வதற்கு அல்லது அதிகுறைவாக்குவதற்குச் சகல சாத்தியமான மாற்றுத் தெரிவுகளையும் ஆய்வுசெய்து, விசேடமாக அதே இடத்திலேயே மீளபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஆய்வுசெய்தல்.

உ. ஒளிவுமறைவற்ற, இராணுவத் தலையீடற்ற பங்கேற்புச் செயல்முறைமூலம் பாதிப்புற்ற ஜனசமூகங்களுக்கு ஓர் அனைத்துமடங்கும் மீள் அபிவிருத்தித் திட்டத்தையும், மீள்குடியேற்றச் செயல்திட்டத்தையும் அபிவிருத்திசெய்தல். நோக்கம் காலப்போக்கில் செங்குத்துச் சேரிகளாக வரக்கூடிய, புதிதாக அமைக்கப்பட்ட கோபுரத் தொடர்மாடி வீடுகளைப் பெற்றுக்கொள்வதைவிட, ஜனசமூகங்கள் சகல வழிகளிலும் கணிசமான அளவுக்கு முன்னேறுவதையும், மேலும் உயர்வான வாழ்க்கைத் தரங்களைப் பெற்றுக்கொள்வதையும் உறுதி செய்வதாக அமைய வேண்டும்.

ஊ. மீள்குடியேற்றங்கள் தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில், வாழிட இடமாற்றப் பகுதிகள் பாதிப்புற்ற ஜனசமூகங்களின் கலந்தாலோசனையுடன் தீர்மானிக்கப் படுவதையும், வீடுகள் ஆகுசெலவுகளைக் கேட்காமல் வழங்கப்படுவதையும் உறுதிசெய்தல்.

எ. குடிமக்களின் மொழி உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்தல். இந்த அறிக்கையிலுள்ள விடய ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோன்று, தாய்மொழி தமிழாகவுள்ள பல குடிமக்கள் தாம் விளங்கிக்கொள்ளாத வெளியேற்றம் மற்றும் மீள்குடியேற்றம் சம்பந்தமான ஆவணங்களில் கையொப்பமிட்டதாகத் தெரிவித்துள்ளனர். அரசாங்க நிறுவனங்களுடனான சகல செயற்பாடுகளிலும், தொடர்பாடல்களிலும் அரசியலமைப்பிலும், அரச கரும மொழிகள் கொள்கையிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ள பிரஜைகளின் மொழி உரிமைகள் நடைமுறைப்படுத்தப்படுவது தீர்மானகரமானதாகும்.

ஏ. ஏற்கெனவே வாழிட இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் மற்றும் அதை எதிர்நோக்கியிருக்கும் சகலருக்கும் வீடுகள், சொத்துகள், வியாபாரத் தொழில்கள் இழப்பு அனைத்துக்கும், அவை விதிமுறையானவையா அல்லது விதிமுறையற்றவையா என்பதை நோக்காது நட்ட ஈடுகள் வழங்கப்படுதல்.

ஐ. மனித வளங்களில் முதலீடுசெய்தல், இயைபுள்ள, அர்த்தமுள்ள வாழ்க்கைத் தொழிற்பயிற்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம், கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்துக்கான அணுகுவழிகளை உறுதிசெய்தல் என்பவை உள்ளிட்ட வகையில் சமூக அதிகார வலுவளித்தல் அடிப்படையிலான பணம் அல்லாத நட்ட ஈட்டு வடிவங்களுக்கு கவனம் வழங்கப்படுவதை உறுதிசெய்தல்.

ஒ. பதிவுபெற்ற மற்றும் பதிவுபெறாத அல்லது விதிமுறையற்ற வியாபாரத் தொழில்களில் சாத்தியவள வாழ்வாதார வருமானங்கள் இழப்புகளுக்குக் கவனம்செலுத்தும் வாழ்வாதார மீட்புக் கருத்திட்டங்களை அர்ப்பணவுணர்வுடன் நடைமுறைப்படுத்துதல். இடைக்காலப்பகுதிக்கு ஒரு வாழ்க்கை வருமானத்தை, அல்லது கொடையை வழங்குதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், இந்த முன்முயற்சிகளுக்குப் பொருத்தமான பயிற்சி, மற்றும் மூலவளங்களையும், ஆரம்பிப்பதற்கான மூலதனத்தையும் வழங்குவதன்மூலம் இணைவு முழுமையளித்தல்.

ஓ. இதுவரையில் பலவந்த வெளியேற்றங்கள்மூலம் இன்னலுற்ற சகலருக்கும் பூரணமான, பொருத்தமான இழப்பீடுகள் கிட்டுவதை உறுதிசெய்தல்.

கொழும்பு மாநகர சபைக்கு

கொழும்பு மாநகர சபை கணிசமான அளவிலான அரசியல் மற்றும் மூலவளப் பிரச்சினைகளோடு செயற்படுவதை CPA அறிந்துள்ளது. ஆயினும், இச்சபை கொழும்பின் வதிவாளர்கள் அனைவரினதும் நலன்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்னும் பணிப்பாணையுடன் ஜனநாயக ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட சபை என்பதால், நாம் இச்சபையிடம் பின்வரும் வேண்டுகோள்களை முன்வைக்கின்றோம்:

அ. சகல பலவந்த வெளியேற்றங்களையும் நிறுத்துவதற்காகச் சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதும், ஏற்கெனவே வெளியேற்றப்பட்டோர் மற்றும் வெளியேற்ற இடர்வரவை எதிர்நோக்குவோரின் உரிமைகளைப் பாதுகாத்தலும்.

ஆ. கொழும்பின் சகல வதிவாளர்களுக்கும் பயனுறுதியுள்ள, எவரையும் ஓரங்கட்டாத, வகைப்பொறுப்புள்ள உள்ளூராட்சியை வழங்கவேண்டிய தனது சொந்த ஜனநாயகப் பணிப்பாணையை UDA குடைசாய்க்காமலிருப்பதை உறுதிசெய்வதற்குத் துடிப்பாகச் செயலாற்றுதல்.

இ. குறிப்பாக நகரின் இலகுவில் பலியாகக்கூடிய வதிவாளர்களுக்கு அதன் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும், அதன் தொழில்சார் ஆற்றல்களை மேம்படுத்துவதற்கும் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கொழும்பில் பாரிய பலவந்த வெளியேற்றங்கள்மூலம் தொடருவதும், மேலும் தொடரவிருப்பதுமான மனித உரிமை

மீறல் இடர்வரவுகள்குறித்து உடனடிக் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகும். இந்த அறிக்கையில் எழுப்பப்பட்டுள்ள பல மனித உரிமை விவகாரங்கள் சம்பந்தமாகவும், தன்னிச்சையாகவே பாதிப்புற்ற ஜனசமூகங்களைத் தேடியறிந்து, நீதிக்கான அவர்களின் போராட்டத்தில் அவர்களுக்கு ஆதரவு வழங்குமாறும் CPA மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு வேண்டுகோள் விடுக்கின்றது. பலவந்த வெளியேற்றங்களில் ஈடுபடவேண்டாமென்றும், சகல பிரஜைகளின் உரிமைகளையும் மதித்து, சட்டத்தின் ஆட்சியோடு ஒட்டிநின்று, பலவந்த வெளியேற்றங்களுக்கெதிரான சட்டக் காப்பேற்பாடுகளை வலுப்படுத்துமாறும் அரசாங்கத்தையும், UDAயையும் கோருமாறு நாம் மனித உரிமைகள் ஆணைக்குழுவைப் பகிரங்கமாக வேண்டிக்கொள்ளுகின்றோம். மனித உரிமைக் கரிசனை விடயங்களில் மௌனமாக இருக்கத்தூண்டும் பாதுகாப்புப் படைகள் மற்றும் UDAயின் பயமுறுத்தல்களுக்கெதிராகப் பிரஜைகளையும், சிவில் சமூக அமைப்புகளையும் பாதுகாக்கும்வகையில் ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

உலக வங்கிக்கும், ஏனைய நிதியளிப்பு முகவர் நிலையங்களுக்கும்

CPA உலக வங்கியையும், ஏனைய கடன் வழங்குவோரையும் இந்த அறிக்கையில் எழுப்பப்பட்டுள்ள ஒரு வீச்சான கரிசனை விடயங்களையும், மேற்கொள்ளப்பட்டுள்ள விதப்புரைகளையும் நோக்குமாறு வேண்டிக்கொள்ளுகின்றது. இருதரப்பு மற்றும் பல்தரப்புக் கடன் வழங்குநர்கள், விசேடமாகத் தன்னார்வமற்ற மீள்குடியேற்றங்கள் குறித்த சர்வதேசத் தரநியமங்கள் மற்றும் சிறப்பான நடைமுறைகளை ஆதரிக்கும் கடன் வழங்குநர்கள் தமது கருத்திட்டங்கள் நேரடியான அல்லது மறைமுகமான வெளியேற்றங்களை ஆதரிக்காதிருப்பதை உறுதிசெய்வது முக்கியமானதாகும். மேலும், அவர்கள் ஜனநாயகத்துக்குப் பதிலாக இராணுவமயமாக்கலை ஆழமாக்கும் வழிமுறைகளாகத் தொழிற்படும் UDA போன்ற முகவர் நிலையங்களுக்கு ஆதரவு வழங்குவதன் ஆழமான தாற்பரியங்களைக் கவனிப்பதும் அதேயளவுக்கு முக்கியமானதாகும். ஆகவே, CPA சகல கடன் வழங்குநர்களையும், விசேடமாக உலக வங்கியையும் கருத்திட்டங்களும், நிதியளிக்கப்படும் முகவர் நிலையங்களும் ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகளுக்குப் பூரண மதிப்பளிப்பதை உறுதிசெய்வதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகின்றது.

## பின்னிணைப்பு 1

### தன்விருப்பற்ற மீள்குடியேற்றங்கள்குறித்த தேசியக் கொள்கை (ஜேசீ): குறிக்கோள்களும், குறிப்பான கொள்கைக் கோட்பாடுகளும்

**கொள்கையின் குறிக்கோள்கள்**

பாதிப்புற்ற நபர்களை ஓர் ஆக்கபூர்வமான, சுய-நிறைவு அடிப்படையில் மீள்நிலைப்படுத்துவதற்கு உதவுவதன்மூலம் தன்விருப்பற்ற, மீள்குடியேற்றத்தின் எதிர்மறை விளைவுகளைத் தவிர்ப்பதும், அதிகுறைவாக்குவதும், தணிப்பதும். கொள்கை கருத்திட்டத்தினால் பாதிப்புற்ற நபர்களினதும், கருத்திட்டத்தினதும் அபிவிருத்திக்கு உதவுதல் வேண்டும்.

அபிவிருத்திக் கருத்திட்டங்களால் பாதகமாகப் பாதிப்புறுவோர் பூரணமாகவும் உடனடியாகவும் நட்ட ஈடுகள் வழங்கப்பட்டு, வெற்றிகரமாக மீள்குடியேற்றம் செய்யப்படுவதை உறுதிசெய்தல்.

அரசின் அபிவிருத்தி நோக்கத்துக்கான கட்டாயக் காணிச் சுவீகரிப்பின் விளைவாக மக்கள் வறுமைநிலையடையாதிருப்பதை உறுதிசெய்தல்.

கட்டாயக் காணிச் சுவீகரிப்பினால் பாதகமாகப் பாதிப்புற்ற நபர்கள் உளவியல், கலாசார, சமூக மற்றும் ஏனைய அழுத்தங்களைக் கையாளுவதற்கு உதவிசெய்தல்.

பாதிப்புற்ற சகல நபர்களும் மனக்குறைகள் நிவாரணத்துக்கு இலகுவில் அணுகக்கூடியதும், பயனுறுதிமிக்கதுமான செயல்முறைகள் கிட்டுவதுகுறித்து அறிவுறுத்தப்படுதல்.

PEA மற்றும் பாதிப்புற்ற மக்களிடையே உடன்பாடு காணப்பட்ட ஒரு காலச் சட்டகத்துடன் ஒரு கலந்தாலோசனை, ஒளிவுமறைவற்ற, மற்றும் வகைப்பொறுப்புள்ள தன்விருப்பற்ற மீள்குடியேற்றச் செயல்முறையை வகுத்தமைத்துச் செயற்படுதல்.

**கொள்கைக் கோட்பாடுகள்**

கருத்திட்டத்துக்கான மாற்றுத்தெரிவுகள் மற்றும் கருத்திட்டத்தினுள் மாற்றுத் தெரிவுகளை மீளாய்வுசெய்வதனூடாக தன்விருப்பற்ற மீள்குடியேற்றங்கள் தவிர்க்கப்படுதல் வேண்டும் அல்லது இயன்றளவுக்குக் குறைக்கப்படுதல் வேண்டும்.

தன்விருப்பற்ற மீள்குடியேற்றங்கள் தவிர்க்கப்படமுடியாத சந்தர்ப்பங்களில் பாதிப்புற்ற நபர்கள் தம்மை மீளமைத்துக்கொள்வதற்கும், வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கும் உதவிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

கொள்கை முழுவதிலும் பால்நிலைச் சமத்துவமும், ஒப்புரவும் உறுதிப்படுத்தப்பட்டு, பேணப்படுதல் வேண்டும்.

பாதிப்புற்ற நபர்கள் இயன்றளவு நேரகாலத்தோடு, வாழிட இடமாற்றப் பிரதேசங்கள், வாழ்வாதார நட்ட ஈடுகள், மற்றும் அபிவிருத்தி விருப்புத்தெரிவுகள் என்பவற்றில் பூரணமாகச் சம்பந்தமுறுதல் வேண்டும்.

காணி இழக்கப்படும் விடயங்களில் நட்ட ஈட்டுக்குப் பதிலாக வேறு காணி வழங்கப்படுவது ஒரு விருப்புத்தெரிவாக அமைதல் வேண்டும்; பதில் காணி வழங்கப்படாதவிடத்து, காசு நட்ட ஈட்டுக் கொடுப்பனவு சகல பாதிப்புற்ற நபர்களுக்கும் ஒரு விருப்புத்தெரிவாக அமைதல் வேண்டும்.

காணிகள், வீடுகள் மற்றும் ஏனைய சொத்துக்கள் இழப்பு மற்றும் வருமான இழப்புக்கான நட்ட ஈடுகள் பூரணமான பதிலீட்டு ஆகுசெலவுகளில் அமைவதோடு, உடனடியாக அவை வழங்கப்படவேண்டும். இது கொடுக்கல்வாங்கல் ஆகுசெலவுகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

மீள்குடியேற்றம் மாகாண மற்றும் உள்ளூர் அதிகாரசபைகளின் பூரண பங்கேற்புடன் திட்டமிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

பாதிப்புற்றோர் பொருளாதார ரீதியிலும், சமூக ரீதியிலும் ஏற்கெனவே அங்கிருந்த ஜனசமூகங்களுடன் ஒன்றிணைக்கப்படுவதற்கான உதவி பங்கேற்பு வழிமுறைகள்மூலம் வடிவமைக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

பாதிப்புற்ற மக்களுக்குப் பொதுவான சொத்து மூலவளங்களும், ஜனசமூக மற்றும் பொதுச் சேவைகளும் வழங்கப்படுதல் வேண்டும்.

மீள்குடியேற்றம் பாதிப்புற்ற மக்களுக்கான ஓர் அபிவிருத்தி நடவடிக்கையாகத் திட்டமிடப்படுதல் வேண்டும்.

காணிகளுக்கு ஆவணரீதியாக உரித்துரிமைகள் இல்லாத பாதிப்புற்றவர்கள் நியாயமாகவும், நீதியாகவும் நடத்தப்படுதல் வேண்டும்.

இலகுவில் பாதிப்புறக்கூடிய குழுக்கள் இனங்காணப்பட்டு, கணிசமான அளவுக்குத் தமது வாழ்க்கைத்தரங்களை உயர்த்திக்கொள்ளும்வகையில் பொருத்தமான உதவிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

கருத்திட்டங்களை நிறைவேற்றும் முகவர் நிலையங்கள் நட்ட ஈடுகள் மற்றும் மீள்குடியேற்றம் என்பவற்றுக்கான பூரண ஆகுசெலவுகளை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

## பின்னிணைப்பு 2

## தனிநபர்களுக்குச் சொந்தமான காணிகளைச் சுவீகரிப்பது சம்பந்தமாகச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள்

**காணிச் சுவீகரிப்புச் சட்டம்**

காணிச் சுவீகரிப்புச் சட்டம் (LAA) தனிநபர் காணிச் சுவீகரிப்புக்கு ஏற்பாடுகள் வழங்கும் முதனிலைச் சட்டவாக்கமாகும். இந்தச் சட்டத்தின் பிரகாரம், காணிச் சுவீகரிப்புக்கான வேறு எந்தச் சட்டமும் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுடனேயே சேர்த்து வாசிக்கப்படுதல் வேண்டும்.

பின்வரும் செயல்முறையூடாக எந்தக் காணியும் ஒரு பொது நோக்கத்துக்காக அரசினால் சுவீகரிக்கப்படலாமென்று இச்சட்டம் எடுத்துரைக்கின்றது:

(1) எந்தப் பிரதேசத்திலுமுள்ள காணியொன்று ஏதாவது பொது நோக்கத்துக்காகத் தேவைபடுகின்றதென்று அமைச்சர் தீர்மானித்தல்.

(2) அமைச்சர் அப்பிரதேசமுள்ள மாவட்டத்தின் சுவீகரிப்பு உத்தியோகத்தருக்கு அக்காணியில் துலாம்பரமான இடத்தில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அக்காணி ஒரு பொது நோக்கத்துக்காகத் தேவைப்படுகின்றது; அப்பொது நோக்கத்துக்கென அக்காணியின் பொருத்தப்பாட்டை அறிந்துகொள்வதற்கு அக்காணியில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாமென்னும் அறிவித்தலைக் காட்சிப்படுத்துமாறு கட்டளையிடுவார்.

(3) ஆரம்ப நடவடிக்கைகள் பூரணமானதும், 5ஆம் பிரிவின் பிரகாரம், ஒரு குறிப்பிட்ட காணி பொது நோக்கத்துக்காகத் தேவைப்படுகின்றதென்று அமைச்சர் பிரகடனம்செய்தல் வேண்டும். அத்தகைய பிரகடனம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, அது காணியில் அல்லது அதற்கருகில் காட்சிக்கு வைக்கப்படுதல் வேண்டும்.

(4) இந்த நிலையில், சுவீகரிக்கப்படவுள்ள காணியில் ஏதாவது அக்கறையுள்ள எவராவது நபர், தனது அக்கறையின் தன்மைகுறித்து சுவீகரிக்கும் உத்தியோகத்தருக்கு அறிவிப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. தனது உரிமைக்கோரிக்கையின் விபரங்கள் மற்றும் நட்ட ஈட்டுத்தொகையின் அளவு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

(5) விசாரணை உத்தியோகத்தர் ஒருவர் ஏனைய விடயங்களோடு, காணியின் சந்தைப் பெறுமதி, நட்ட ஈட்டுக் கோரிக்கைகள் மற்றும் நட்ட ஈடு கோரும் தரப்பினரின் அக்கறைகள்குறித்து விசாரணை நடத்தி, நட்ட ஈட்டுக்கு உரியவர்கள் சம்பந்தமாகவும், அவர்களின் அக்கறை சம்பந்தமாகவும், நட்ட ஈட்டுத்தொகை சம்பந்தமாகவும் தீர்மானம் மேற்கொள்ளுவார்.

(6) வழங்கப்படும் நட்ட ஈடு சம்பந்தமாகத் திருப்தியடையாத ஒருவர், சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட ‘மீளாய்வுச் சபை’ ஒன்றுக்கு மேன்முறையீடு செய்யலாம்.

சுவீகரிப்பு உத்தியோகத்தரின் கட்டளை கிடைத்து 21 நாட்களுள் அத்தகைய மேன்முறையீடு செய்யப்படுதல் வேண்டும்.

(7) ஒருவர் மீளாய்வுச் சபையின் முடிவில் திருப்தியுறாவிட்டால், அவர் மீளாய்வுச் சபையின் முடிவு அறிவிக்கப்பட்டு 21 நாட்களுக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

**அரச காணியை மீளுடைமை கொள்வதற்கு எடுக்கப்படவேண்டிய படிகள்**

**1979ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க அரச காணிகள் (மீளுடைமைகொள்ளல்) சட்டம்**

**<u>வெளியேற்றல் செயல்முறை</u>**

சட்டம் அரச காணியை, "அரசு சட்டரீதியாக உரித்துரிமைகொண்டுள்ள காணி அல்லது அரசினால் அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அத்தோடு தொடர்புற்ற உரிமைகள், நலன்கள் மற்றும் சலுகைகளுடன் கைதவிர்ப்புச்செய்யப்படக்கூடியவை" என்று வரைவிலக்கணம் செய்கின்றது.

சட்டம், தகுதிவாய்ந்த அதிகாரசபைக்கு அதிகார அங்கீகாரமற்ற உடைமை கொண்டிருக்கும் அல்லது குடியிருக்கும் ஒரு நபருக்கு வெளியேற்ற அறிவித்தலை விடுக்கவும், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அதிகாரசபைக்கு அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட நபருக்கு ஒரு குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னராகக் காணியின் வெற்று உடைமை கையளிக்கப்படவேண்டுமென்றும் தெரிவிக்கின்றது. இத்திகதி இத்தகைய அறிவித்தல் வழங்கப்பட்ட அல்லது அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்பட்ட தினத்திலிருந்து 30 தினங்களுக்குக் குறைவில்லாத ஒரு திகதியாகும்.

இத்தகைய அறிவித்தலுடன் இணங்கியொழுகத் தவறினால் நீதவான் நீதிமன்று (விசாரணையின் பின்) ஒரு கட்டளையை விடுத்து, அத்தகைய நபரையும், அவரில் தங்கிவாழ்வோரையும் வெளியேற்றுவதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது.


**<u>உரித்து நிலைநாட்டல் நடவடிக்கை</u>**

சட்டத்தின் 12ஆம் பிரிவுக்கமைய சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஒரு காணியிலிருந்து வெளியகற்றப்பட்ட எவராயினும் நபர் அல்லது தான் அந்தக் காணியின் உரிமையாளரென்று கூறும் எவராவது நபர் தனது உரித்தை நிலைநாட்டும்வகையில் அரசுக்கெதிராக வழக்குத்தொடரலாம். ஆயினும், இது வெளியேற்றல் உத்தரவுத் திகதியிலிருந்து 6 மாத காலத்தினுள் செய்யப்படுதல் வேண்டும்.

**<u>நட்ட ஈடு</u>**

12ஆம் பிரிவின்கீழ் எவராவது நபரினால் அரசுக்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில் தீர்ப்பு அத்தகைய நபருக்குச் சாதகமாக அமைந்தால், தான் அத்தகைய காணியைக்

கையளிக்க நிர்ப்பந்திக்கப்பட்டதன்மூலம் ஏற்பட்ட சேதங்களுக்கு ஒரு நியாயமான நட்ட ஈட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.



රාජ්‍ය ආරක්ෂක හා නාගරික සංවර්ධන අමාත්‍යාංශය
அரச பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF DEFENCE & URBAN DEVELOPMENT

නාගරික සංවර්ධන අධිකාරිය
நகர அபிவிருத்தி அதிகாரசபை
Urban Development Authority
6th & 7th Floors, Sethsiripaya, Battaramulla

www.uda.lk

මගේ අංකය: URP-
2013 ඔක්තෝබර් මස 31 වන දින.

නාගරික පුනර්ජීවන ව්‍යාපෘතිය - කොළඹ නගරය
දෙමටගොඩ නව නිවාස ව්‍යාපෘතිය